


“தோழர் **வே.ஆனைமுத்து** வழியில்”

**சுவடி : 4** **ஏடு : 19**
**மே-சூன் 2025**


**குறிக்கோள்**

இந்தியாவில் பொதுவுடைமை மலர மார்க்சிய–பெரியாரிய நெறியில் தேசிய இனவழிப்பட்ட சமஉரிமை உடைய சமதர்மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சி அமைய ஆவன செய்தல்.


**ஆசிரியர்**

*வாலாசா வல்லவன்*

**ஆசிரியர் குழு**

*க. முகிலன்*
*சா. குப்பன்*
*தி. துரை சித்தார்த்தன்*
*முனைவர் முத்தமிழ்*
*சி. நடராசன்*
*ந. கருணாகரன்*
*இரா. திருநாவுக்கரசு*

**இதழ் வடிவமைப்பு :**
**சன் நகலகம்**
சென்னை - 5. பேசி : 98400 15179

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**
ஆசிரியர் **‘புதிய சிந்தனையாளன்’**
2/12, சி.என்.கே.சந்து,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

தொடர்புக்கு :
**86681 09047, 98947 28032**
**94885 34225**
*
மின்னஞ்சல் :
**puthiyasinthanaiyalan@gmail.com**
இணையத்தில் படிக்க
www.keetru.com


**ஆசிரியவுரை**

# தமிழ்நாடு ஆளுநரின் அதிகார அத்துமீறலுக்கு உச்சநீதிமன்றம் கொடுத்த சவுக்கடி

தமிழ்நாட்டில் 26.4.2021 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி நடந்து வருகிறது. இந்த ஆட்சிக்கு இடையூறு விளைவிக்க வேண்டும் என்றே நாகாலாந்து ஆளுநராக இருந்த ஆர்.என்.இரவியை தமிழ்நாட்டின் ஆளுநராக மாற்றியது மோடி தலைமையிலான பா.ச.க. அரசு. 18.9.2021 அன்று தமிழ்நாடு ஆளுநராகப் பதவி ஏற்றுக்கொண்ட நாள் முதலே மாநில அரசின் உரிமைகளைப் பறிக்கும் செயல்களில் ஆளுநர் இரவி ஈடுபட்டு வருகிறார். தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்ட வரைவு களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலம் கடத்தி வந்தார்.

தமிழ்நாடு அரசின் மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கு வேந்தர் என்ற முறையில் ஆளுநர் துணைவேந்தர் நியமனங்களில் ஆர்.எஸ்.எஸ். கொள்கை கொண்டவர்களை நியமிக்க பல்வேறு சட்டமீறல்களைச் செய்து வந்தார்.

ஆளுநரின் தவறான போக்குகளைக் கண்டித்தும் மாநில சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்ட வரைவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆண்டுக் கணக்கில் காலம் கடத்தி வந்ததை எதிர்த்தும் தமிழ்நாடு அரசு உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் ஜெ.பி. பார்த்திவாலா, ஆர். மகாதேவன் அமர்வு 8.4.2025 அன்று மிகச் சிறப்பான தீர்ப்பை அளித்தது. ஆளுநர் நிறுத்தி வைத்திருந்த சட்ட வரைவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் இன்றியே அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 142 அய்ப் பயன்படுத்தி அந்த மசோதாக்கள் நிறைவேறியதாகத் தீர்ப்பு வழங்கினர்.

மேலும் ஆளுநர்கள் தங்களுக்கு அனுப்பப்படும் சட்ட வரைவுகளுக்கு மூன்று மாதத்திற்குள்ளும், குடிஅரசுத் தலைவர் ஆறு மாதத்திற்குள்ளும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினர். அரசமைப்புச் சட்டத்தின் கூறு 200இன்படி சட்டமன்றம் நிறைவேற்றிய சட்ட வரைவுகளுக்கு நிறுத்தி வைக்க ஆளுநர்களுக்கு உரிமை இல்லை என்றும் அதிரடியாகத் தீர்ப்பு வழங்கினர். ஆளுநரின் செயல்பாடுகள் இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள கூட்டாட்சி கோட்பாட்டிற்கு எதிரானது என்றும் தீர்ப்பு வழங்கினர். இது தமிழ்நாடு அரசின் மாநில உரிமையை நிலைநாட்டும் முயற்சிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

குடிஅரசுத் துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை கண்டித்து நாடாளுமன்றத்திற்கே உச்ச அதிகாரம் உள்ளது. உச்ச நீதிமன்றத்திற்கு இல்லை என்று வெளிப்படையாகப் பேசினார். புதியதாகப் பொறுப்பேற்றுள்ள தலைமை நீதிபதி கவாய் அவர்கள் எல்லாவற்றுக்கும் மேலானது அரசமைப்புச் சட்டம் தான் என்று பதிலளித்தார்.

இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்றிய பா.ச.க. அரசு குடிஅரசுத் தலைவர் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க காலக்கெடு விதிக்க முடியுமா? என்பது உள்ளிட்ட 14 கேள்விகளை எழுப்பி விளக்கம் கேட்டு குடி அரசுத்

தலைவர் மூலமாக உச்சநீதிமன்றத்தை வினவி உள்ளது. இது மாநில உரிமைகளுக்கு எதிரான ஒன்றிய அரசின் செயல்பாடேயாகும்.


உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை தமிழ்நாடு அரசு அரசிதழில் வெளியிட்டு, சில பல்கலைக்கழகங்களுக்குத் துணைவேந்தர் தேடுதல் குழுக்களை அமைத்தது.

இதை எதிர்த்து திருநெல்வேலி பா.ச.க. மாவட்டச் செயலாளர் கே.வெங்கிடாசலபதி தமிழ்நாட்டு அரசின் நடவடிக்கைக்கு தடைவிதிக்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

இதை அவசர வழக்காக ஏற்றுக்கொண்ட சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஜி.ஆர். சாமிநாதன்-வி. இலட்சுமி நாராயணன் அமர்வு அவசர அவசரமாக விசாரித்து தமிழ்நாடு அரசு பதில் மனு அளிப்பதற்குக் கூட வாய்ப்பளிக்காமல் துணைவேந்தர் தேடுதல் குழு அமைக்க இடைக்காலத் தடை விதித்தது. உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை மறுதலிக்க உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லையென தெரிந்தும் வேண்டுமென்றே இப்படி ஒரு தீர்ப்பை 21.5.2025 அன்று வழங்கி உள்ளனர். பார்ப்பனர்களின் அதிகாரத் திமிரைக் காட்டியுள்ளனர்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்த இடைக்காலத் தடையை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளது.

மாநில அரசின் உரிமைகளைப் பறிக்கும் விதத்தில், உச்சநீதிமன்றத்தை குடிஅரசுத் தலைவர் நாடி இருப்பதும், சென்னை உயர்நீதிமன்றத்தின் இடைக் காலத் தடை உத்தரவும் அமைந்துள்ளது. மக்கள்திரள் எழுச்சியின் மூலமாகவும் உச்சநீதிமன்றத்தில் சிறப்பாக வழக்காடி யும் மோடி அரசின் தடைகளைத் தகர்த்து மாநில உரிமையை மீட்போம்.



❖


- வாலாசா வல்லவன்

# அறிஞர் வே. ஆனைமுத்து அவர்களின் 101ஆம் பிறந்தநாள்

தற்போது நடைபெற்றுவரும் இந்துத்துவ பா.ச.க. ஆட்சி மேலும் வலுப்பெறுவதைத் தடுக்கவும் அதை எதிர்த்துப் போராடி வீழ்த்தவும் பெரியாரியல் கொள்கைகள் வெகுமக்களிடையே வேரூன்றச் செய்திடல் வேண்டும். அதற்காகப் பெரியாரின் கொள்கைகளைக் கற்கவும் கற்பிக்கவும் அறிஞர் வே. ஆனைமுத்து அவர்கள் தன் அரிய கடின உழைப்பால் கையளித்துள்ள 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்' மற்றும் பெரியாரியலை செழுமையாக்கித் தந்துள்ள 'வே. ஆனைமுத்து கருத்துக் கருவூலத்தையும்' நல்ல கருவி களாகக் கொண்டு சனாதன பார்ப்பன மதவாதக் கூட்டத்தின் கொட்டத்தை வீழ்த்திட உந்தாற்றல் பெறுவோம்!

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு ஒன்றிய அரசுத் துறைகளிலும் பொதுத் துறைகளிலும் வேலைவாய்ப்பில் 27 விழுக்காடு இடஒதுக்கீடு கிடைக்கச் செய்திட வே. ஆனைமுத்து அவர்கள் பத்தாண்டுகள் அயர்வும் சலிப்புமின்றி வடபுலத்திற்குச் சென்று பாடுபட்டார்.

வே. ஆனைமுத்து அவர்கள் 35 ஆண்டுகளாக வலியுறுத்தி வந்த ஒன்றிய, மாநில அரசு வேலை வாய்ப்பு மற்றும் உயர்கல்வி பெறும் வாய்ப்புகளில் நூறு விழுக்காட்டு இடங்களையும் பழங்குடியினர், பட்டியல் வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், உயர்சாதிப் பிரிவினர் ஆகியோருக்கு அவரவர் மக்கள் தொகை விகிதாசாரம் பங்கீடு செய்து வழங்கப்படுவதற்காகப் பாடுபட உறுதியாகச் செயல்பட வேண்டும்.



மக்களிடையே உயர்வு-தாழ்வு நீங்கிய சமன்மைச் சமுதாயமான சோசலிச அமைப்பை உருவாக்கிட, உழைப்பாளர் வர்க்க ஓர்மை பெற்றிடவும் மொழிவழித் தேசிய இனங்கள் சுயநிர்ணய உரிமையுடைய தன்னுரிமைத் தமிழ்த்தேசம் அடைந்திட தமிழர் என்ற ஓர்மை உணர்வு பெற்றிடவும் தடையாக உள்ள வருண-சாதியமைப்புத் தகர்க்கப்படல் முதன்மை என்ற நோக்கத்திற்காக தம் சிந்தனையாலும், எழுத்தாலும், பேச்சாலும் ஆற்றிய திறவினையினாலும் வே. ஆனைமுத்து தம் வாழ்நாளை ஒப்படைத்தார். அவர் எந்தக் கொள்கைக்காக வாழ்ந்தாரோ, அந்தக் கொள்கைகள் வலிமை பெறவும் செயல்வடிவம் பெறவும் பாடுபட வே. ஆனைமுத்து அவர்களின் 101ஆம் பிறந்த நாளில் உறுதிபூணுவோம்!

**அறிஞர் வே. ஆனைமுத்து புகழ் ஓங்குக!**


# தமிழ், தமிழன், தமிழ்நாடு

- **வே.ஆனைமுத்து**

தமிழ், தமிழன், தமிழ்நாடு, இந்தியா, திராவிடன், திராவிடம், திராவிட நாடு என வரும் சொற்கள், சொல்லாட்சிகள், அவை குறித்த-குறிக்கிற செய்திகள் யாவை என்பது பற்றிச் சுருக்க மாகச் சில செய்திகளை இங்கே பதிவு செய்ய முயற்சித்துள் ளேன். இவற்றை எல்லோரும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என உரிமையுடன் வேண்டுகிறேன்.

'தமிழ்', 'தமிழ் கூறும் நல்லுலகம்' என உள்ள சொற்கள் தொல்காப்பியத்திலேயே இடம்பெற்றுள்ளன.

தொல்காப்பியம் தமிழர்க்குக் கிடைத்துள்ள முதலாவது தமிழ் நூல் ஆகும். அது குறைந்தது 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டது.



'தமிழ்' என்ற சொல்லும், தமிழ் கூறும் நல்லுலகம்-தமிழ் பேசப்பட்ட உலகம்-தமிழ்மொழி பேசப்பட்ட நாடு என்ற கருத்து இதனால் 2500 ஆண்டுக்கு முந்தைய வரலாற்றைப் பெற்றிருக்கிறது.

அடுத்து, தமிழ் மறுமலர்ச்சிக் காலம் அல்லது சைவ சமய எழுச்சிக் காலம் எனப்படுகிற கி.பி.6ஆம் நூற் றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தில், கி.பி.6ஆம் நூற்றாண்டில் திருநாவுக்கரசர் என்னும் அப்பர் பாடிய தேவாரத்தில், திருத் தாண்டகப் பகுதியில்,

'ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்' என்னும் ஒரு வரி, ஓர் அடி வந்துள்ளது. தமிழன் என்ற சொல் லாட்சிக்கு அதுவே தோற்றுவாய் எனக் கொள்ளலாம்.

அதன்பின்னர், 1300 ஆண்டுகள் கழித்து. 1908இல் மேதை பண்டித அயோத்திதாசர் "**தமிழன்**" என்ற பெயரில் ஓர் இதழினை வெளியிட்டு, "தமிழன்" என்னும் சொல்லை ஆட்சிக்குக் கொண்டு வந்தார். இதற்கு முன்னரே, "**தமிழகம்**" என்னும் பெயரில் ஓர் இதழினை 1905இல் தஞ்சாவூர் உலகநாதம் பிள்ளை என்பவர் வெளியிட்டுள்ளார். 1920இல் "செந்தமிழ்க் களஞ்சியம்" என்னும் ஏட்டினை மறைமலையடிகள் வெளி யிட்டுள்ளார்.

தமிழ், தமிழ் உலகம், தமிழன், தமிழகம், செந்தமிழ் என்னும் சொல்லாட்சிகள் இப்படியே எழுத்து வழக்கிலும், பேச்சு வழக்கிலும் பதிவாகியுள்ளன.

கி.பி.8ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் எனக் கருதப்படும் மாணிக்கவாசகர், "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என மனமாரப்பாடி மகிழ்ந்தார். சிவன் தமிழர்க்குரிய முழுமுதற் கடவுள் என்று நம்பப்பட்டாலும், இந்தியா முழுவதிலும் சிவனிய மதம் பரவிவிட்டது. ஆயினும் தென்னாட்டுக்கு உரிய கடவுள் சிவன் என்பதைக் குறிக்கவே அவர் அவ்வாறு பாடினார்.

சேரர், சோழர், பாண்டியர் வரலாறுகள் கடைச் சங்ககால நூல்களில்-குறிப்பாகப் புறநானூற்றில் பதிவாகியுள்ளன. பழந்தமிழர் வாழ்வு பற்றிய ஆய்வு 1866க்குப் பிறகுதான், அகழ்வு ஆராய்ச் சிகள் வாயிலாக நிலைநாட்டப்பட்டது. கி.பி.850க்குப் பிற்பட்ட காலத் தமிழ் அரசர்களின் வரலாறுகளையும், ஆட்சிக் கால வரையறைகளையும் அறிய உதவும் நிலைத்த சான்றுகளாக கல் வெட்டுகளும், செப்பேடுகளும் உள்ளன.

"தமிழ்நாடு தமிழருக்கே!", "தமிழ் வாழ்க!" என்னும் முழக்கங்கள் 11.09.1938இல் முதன்முதலாக சென்னை, திருவல்லிக்கேணி கடற்கரையில் பெரியார் ஈ.வெ.இராமசாமி அவர்க ளால் எழுப்பப்பட்டன. 'தமிழ் வாழ்க!', 'இந்தி ஒழிக!' என்னும் முழக்கங் களை ஏற்ற எல்லோராலும்-எல்லாத் தமிழராலும் ஒரே முகமாகத் 'தமிழ் நாடு தமிழருக்கே' என்ற அரசியல் கோரிக்கை தூக்கிப் பிடிக்கப்படவில்லை. பெரியாரின் தலைமையில் இயங்கிய 'தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்' என்கிற நீதிக்கட்சியின் முழக்கமாகவே அது இருந்தது.

1920 நீதிக்கட்சி ஆட்சியின் தொடக்க காலந்தொட்டு, 1937இல் அக்கட்சியின் ஆட்சி முடிவுக் காலம் வரையில் தமிழர், தெலுங்கர், மலையாளிகள், கன்னடியர் ஆகிய நான்கு மொழிகளைப் பேசும் நாடுகளின் மக்களுக்கு உரிய தாகவே சென்னை மாகாண ஆட்சி இருந்தது.அப்படிப்பட்ட கட்சியின் பேரால் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்னும் கோரிக்கையை எழுப்பிய போது, அக்கட்சியிலிருந்த தமிழர் அல்லாதார், நீதிக்கட்சியில் தங்கள் தங்கள் நிலைபாடு என்ன என வினா எழுப்பினர். அதன் விளைவாகவே, 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்னும் முழக்கம், 17.12.1939க்குப் பிறகு "திராவிட நாடு திராவிடருக்கே" என (17.12.1939 'குடிஅரசு') உருப்பெற்றது.

'திராவிட நாடு' என்பது 'சென்னை மாகாணம்' என அன்று இருந்த தென்னிந்திய ஆட்சிப் பகுதியையே குறித்தது.

இதனை, மேற்கண்ட நான்கு மொழியினரும் பங்கேற்ற திருவாரூர் நீதிக்கட்சி மாநாட்டில் 1940இல் துலாம்பரமாக அறிவித்தனர். ஆயினும் எந்தக் கட்டத்திலும் தமிழ்நாடு தவிர்த்த-தமிழர் அல்லாத மற்ற திராவிட மொழி நாடுகளில் இக்கோரிக்கைக்கு ஆதரவோ, செல்வாக்கோ தேடப்படவில்லை.

மேலும், 1940 முதல் 1945 முடிய அக்கோரிக்கையின் உள்ளடக்கம் தில்லி பார்ப்பன-பனியா ஆதிக்கத்திலிருந்து சென்னை மாகாணம் விடுபட்டு, வெள்ளையரின் நேரடி ஆட்சியின்கீழ் இருக்கவேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. வெள்ளையர் இக்கோரிக்கையை ஏற்க மறுத்தனர். அந்தக் கோட்பாடு, 1945 வரையில், முழு உரிமை பெற்ற சுதந்தரத் திராவிட நாடு கோருவதான உள்ளடக்கத்தைப் பெற்றிருக்கவில்லை என்பது நினைவில் கொள்ளத் தக்கது. நிற்க.

அதன்பிறகு 1945இல் திருச்சி மாநாட்டில்தான் 'சுதந்தர திராவிட நாடு' கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

"திராவிட நாடு திராவிடருக்கே!" என்னும் கோட்பாடு 1956 அக்டோபர் வரையில் பெரியாரால் ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தது.

1916, 1926 தொடங்கி இரண்டு காரணங்களுக்கான அடிப்படையில் கோரிக்கைகள் எழுந்தன.

1916இல் தோற்றுவிக்கப்பட்ட, "தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்", தென்னிந்தியாவில்-சென்னை மாகாணத்தில் சமுதாயம், சமயம், கல்வி, மாகாண, மத்திய சட்ட அவைகள், மாகாண ஆட்சி நிருவாகம், மாகாண நீதித்துறை நிருவாகம் இவற்றில் பார்ப்பனர் பெற்றிருந்த பெரிய ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் அடியோடு ஒழிப்பதை நோக்கங்களாகக் கொண்டது.

அன்று ஒற்றை ஆட்சிப் பரப்பாக விளங்கிய இந்தியாவில்-25 கோடி மக்கள் இருந்த இந்தியாவில் சில இலக்கம் பிரிட்டானிய வெள்ளையரே இந்தியா முழுவதிலும் எல்லா உயர் நிருவாகத் துறைகளிலும் முழு ஆதிக்கம் பெற்றிருந்தனர். அந்த ஆதிக் கத்தை ஒழித்திட சட்ட அவைகளையும் ஆட்சி நிருவாகத் தையும் "இந்தியர் மயம் ஆக்குதல்" என்னும் கோட்பாட்டை இந்திய தேசிய காங்கிரஸ் 1885 முதலே தூக்கிப் பிடித்தது. அப்போதைய காங்கிரசில் பார்ப்பனர், பார்சி, வெள்ளையர் மட்டுமே உயரிய கட்சிப் பொறுப்புகளில் இருந்தனர். அதனால் இயல்பாகவே-தவிர்க்க முடியாததாகவே, கட்சியிலும், ஆட்சி யிலும் "இந்தியர் மயம் என்பது பார்ப்பனர் மயமாகவே" முடிந்தது.

அன்று இந்தியருள் எழுத்தறிவு பெற்றோர் மிகவும் குறைவு, சென்னை மாகாணத்தில் எழுத்தறிவு பெற்றோர் 7 விழுக்காடு பேர். இந்த 7 விழுக்காட்டில் யார், யார் இடம் பெற்றிருந்தார்கள்? பார்ப்பனர் மூவருள் 2 பேர்; பார்ப்பனர் அல்லாதாரில் மேல்சாதியினர் (கம்மவார், வெள்ளாளர், ரெட்டியார்) 3 பேர்; முகம்மதியரில் உருது பேசுவோர் 1; கிறித்துவரில் மேல் சாதியினர் 1, இவர்களே எழுத்தறிவு பெற்றிருந்தனர். 100க்கு 85, 90 பேர்களாக இருந்த சூத்திர கீழ்ச் சாதிகளிலும், ஆதித்திராவிடரிலும் எழுத்தறிவு பெற்றவர் களே இல்லை.

**இந்த இழிவு பற்றி, 1885 முதல் செயல்பட்ட இந்திய தேசிய காங்கிரசோ, 1923 முதல் தனித்து இயங்கிய தமிழ் மாகாண காங்கிரசோ, இந்திய அளவில் 1925 முதல் செயல்பட்ட பொது வுடைமைக் கட்சியோ, 1936 க்குப் பிறகு காங்கிரசுக்குள்ளேயும், தனியாக வெளியே யும் இயங்கிய சோசலிஸ்டுக் கட்சியோ, கிஞ்சிற்றும் கவலைப்படவில்லை. இவை சிந்திக்கத் தக்கவை.**

சென்னை மாகாணத்தில் இயங்கிய நீதிக்கட்சியினரும், பெரியாரும்; பம்பாய் மாகாணத்தில் இயங்கிய உண்மை நாடுவோர் சங்கத்தினர், பார்ப்பனர் அல்லாத குழுவினர், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் தலைமையில் இயங்கிய அமைப்பினரும் மட்டுமே இதுபற்றிக் கவலைப்பட்டனர்.

**இந்திய அளவில் இந்து-இசுலாம்-பார்சி என்கிற வேற்றுமைகளை மூடிமறைத்துக் கொண்டு, 'இந்தியர்' என்கிற பெயரிலும், வடிவிலும் வெள்ளையர் ஆதிக் கத்தை எதிர்த்தது போலவே, சென்னை மாகாணத்தில் நிலவிய பார்ப்பனர் ஆதிக்கத்தை தமிழர், தெலுங்கர், கன்னடியர், மலையாளிகள் ஆகிய பார்ப்பனரல்லா தார் இணைந்து, "திராவிடர்" என்ற பெயருடன் முழு மூச்சாக எதிர்ப்பது ஒரு தவிர்க்க முடியாத-ஓர் இன்றிய மையாத தேவையாக, கட்டாயக் கடமையாக இருந்தது. இதனால் எல்லோரும் அறியத்தக்க சில நற்பயன்கள் ஏற்பட்டன.**

1. 1923க்கு பிறகு ஆதித்திராவிடரும், சிற்றூர்ப்புற சூத்திரச் சாதியினரும் பொதுக் கல்வி பெற முதன்முதலாக வாய்ப்பு ஏற்பட்டது. வெள்ளையர் வெளியேறிய 1947இல், சென்னை மாகாணத்தார் எழுத்தறிவு 16 விழுக்காடு. இதில் பார்ப்பனர் 3 பேர், மற்றவர் 'சென்னை மாகாணப் பார்ப்பனர் அல்லாதார்'. இன்று தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்றோர் 70 விழுக்காடு; இதில் பார்ப்பனர் 3 பேர் போக, மீதப்பட்டோர் பார்ப்பனர் அல்லாதார்.
2. கல்லூரிக் கல்வியில் 1910-20களில் 70 விழுக்காடு இடங்களைப் பார்ப்பனர் பெற்றிருந்தனர். இன்றைய தமிழகத்தில் இந்த நிலை மிகப்பெரிய அளவில் மாறி யிருக்கிறது. இது உண்மை.
3. மாகாண அரசு-மாநில அரசு உயர் அலுவல்களில் இன்று தமிழ் நாட்டில் பார்ப்பனர் ஆதிக்கம் பெரிய அளவுக்கு இல்லை, ஆனால் ஒற்றை இந்தியாவின் பகுதியாக மட்டுமே உள்ள தமிழகத்தில், உயர் இந்திய ஆட்சிப் பணி அலுவல்களில், பிறமொழியினர் ஆதிக்கம் பெரிய அளவில் உள்ளது. இதுவும் உண்மை.

4. சமுதாயத்திலும், சமய வாழ்விலும் பார்ப்பனர் ஆதிக்கம் 1926க்குப் பிறகு ஒரு சரிவைச் சந்தித்திருக்கிறது. பார்ப் பனியத்தின் பேரில் ஒரு எதிர்ப்பு உணர்வு எல்லாத் தரப்புத் தமிழரிடத்திலும், ஏதோ ஒரு தன்மையிலும் வடிவிலும் இடம்பெற்றுள்ளது. ஆனால் அதை உண்மை யான பார்ப்பனிய மறுப்பாக-ஒழிப்பாக வளர்த்தெடுக்கப் போதிய முயற்சிகள் இல்லை.

இப்படிப்பட்ட ஒரு நிலை, இந்தியாவிலுள்ள பிறமொழி மாநிலங்களில் 1916-2005க்கு இடைப்பட்ட 90 ஆண்டுகளில் உண்டாக்கப்படவில்லை. அங்கெல்லாம் திராவிட இயக்கம் என்பது வேர் பிடிக்கவில்லை; அதற்கான முயற்சிகளைத் திராவிட இயக்கம் மேற்கொள்ளவில்லை.

மா.பெ.பொ.க. 1978 முதல் இந்திய மாநிலங்கள் பல வற்றில் நேரடியாக மேற்கொண்ட செயல்பாட்டினால், கீழ்த்தட்டு சூத்திர வகுப்பினருக்குப் பிற்படுத்தப்பட்ட இந்து, இஸ்லாமிய, கிறித்துவ, சீக்கிய வகுப்பினருக்கு, 1994 முதல் மய்ய-மாநில அரசு அலுவல்களில் மட்டும் 27 விழுக்காடு இடஒதுக்கீடு கிடைத்துள்ளது. பார்ப்பன ஆதிக்க ஒழிப்புக்கு இது போதாது. நிற்க.

இந்நிலையில், தமிழ், தமிழன், தமிழ்நாடு என்னும் கோட்பாடு முழு வீச்சோடு வளரவும், தழைக்கவும் 'திராவிடம்', 'திராவிடர் இயக்கம்', 'திராவிடக் கொள்கை' ஒரு பெருந்தடை யாக இருந்தது - இன்றும் இருக்கிறது என்று கருதப்படுவது பற்றி இங்கே சிலவற்றைக் குறிப்பது பொருந்தும்.

**வெள்ளையர் வருகைக்கு முன்னரே; பிஷப் கால்டு வெல் அவர்களின் திராவிடமொழிக் குடும்பம் பற்றிய கருதுகோள் மற்றும் ஆய்வுக்கு முன்னரே; ஹீராஸ் பாதிரியாரும், சர். ஜான் மார்ஷல் என்பாரும் மொகஞ்ச தாரோ, ஹாரப்பா அகழ்வு ஆய்வு முடிவில் திராவிட அல்லது தமிழ் நாகரிகத்தின் அழிபாடுகளே அங்கு உள்ளவை என்பதை உலகுக்கு அறிவிக்கும் முன்னரே; சென்னை மாகாணப் பார்ப்பனரல்லாதார் 1916இல் நீதிக்கட்சியை அமைப்பதற்கு முன்னரே; 1944இல், பெரியார் ஈ.வெ.இரா., 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்பதன் பெயரை 'திராவிடர் கழகம்' என மாற்றி அமைப்பதற்கு முன்னரே - 'திராவிட', 'திராவிட சங்கம்' என்னும் சொல்லாட்சிகள் இங்கு இருந்துள்ளன. அச்சொற்கள் எதையெதைக் குறிப்பதற்காகப் பல்வேறு காலக்கட்டங்களில் கையாளப்பட்டுள்ளன. அதனால் விளைந்தவை கேடானவையா, நன்மையானவையா என்பதை நாம் சீர்தூக்கிப் பார்ப்பது நல்லது.**

1. 'திராவிட சங்கம்' என்னும் பெயரில், கி.பி.5ஆம் நூற்றாண்டில், வச்சிர நந்தி என்பவரால் நிறுவப்பட்டது. இது ஒரு சமண சங்கம் எனக் கருதப்படுகிறது. சமணம், வேத மதம் என்கிற பார்ப்பன மதத்துக்குப் புறம்பானது; எதிர்ப் பானது.

**இதனால், வேத மதத்துக்கு எதிரான சங்கம் 'திராவிட சங்கம்' என்பதை, இச்சொல்லாட்சி குறிப்பதாகக் கொள்ளலாம்.**

2. தென்னிந்தியப் பார்ப்பனர்களை, 'திராவிட பிராமணன்' எனக் குறிப்பிடும் வழக்கம் கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு வழக்கில் வந்தது.

இதில் உள்ள 'திராவிட' என்னும் சொல்லாட்சி, தென்னாடு, தெற்குப் பகுதி என்பதைக் குறிக்கவே பயன்பட்டுள்ளது.

1901-1909இல் எட்கர் தர்ஸ்ட்டன் தொகுத்து வெளியிட்ட "தென்னிந்தியச் சாதிகளும் பழங்குடிகளும்" (Castes and Tribes of Southern India) என்னும் சென்னை மாகாண அரசு வெளியீடாக வந்த நூலில், பின்வருமாறு காணப்படு கிறது.

திராவிட-தென்னிந்திய பிராமணர்கள் 'திராவிட' என அழைக்கப்படுகின்றார்கள் (South Indian Brahmans are called Dravidas - Vol-II, C-J, Page 166).

பிராமணர் எனப்படும் பார்ப்பனர் இந்தியா முழுவதிலும் உள்ளனர். ஆனால் 'தென்னாட்டுப் பார்ப்பனர்' என்பதைக் குறிக்கவே தென்திசைப் பார்ப்பனர் 'திராவிட பிராமணாள்' என அழைக்கப்பட்டனர். இன்றும் இத்தன்மையில் இது வழக்கில் உள்ளது.

3. 1850க்குப் பிறகு தமிழில் பல மாத ஏடுகள், கிழமை ஏடுகள், நாள் ஏடுகள் அச்சிடப்பட்டு வெளிவந்தன.

'திராவிட' என்கிற சொல்லை முன்னொட்டாகக் கொண்டு முன்னால் இணைத்துக்கொண்டு 1884 முதல் பல ஏடுகள் வெளிவந்துள்ளன. அவையாவன :

| | | |
|---|---|---|
| திராவிட அபிமானி | | 1884 |
| திராவிட வர்த்தமானி | வாரம் இருமுறை செய்தி இதழ் வாசுதேவன், பெங்களூர் | 1884 |
| திராவிட பாண்டியன் | ஜான் இரத்தினம் சென்னை | 1885 |
| திராவிட இரஞ்சினி | டி.வி. வெங்கடராஜுலு நாயுடு, திருச்சி | 1887 |
| திராவிட வர்த்தினி | மாத செய்தி இதழ், சண்முகம், சென்னை | 1891 |
| திராவிட நேசன் | சைவ சமய இதழ். பார்த்தசாரதி, தஞ்சாவூர் | 1891 |
| திராவிட மந்திரி | வார இதழ், ஈழத்து ச. விசுவலிங்கம், காரைக்கால் | 1893 |
| திராவிட பானு | வார இதழ், தூத்துக்குடி | 1895 |
| திராவிட பாண்டியன் | வார இதழ் | 1896 |
| திராவிட கோகிலம் (தமிழ் ஆங்கிலம்) | காலாண்டு இதழ், சதாசிவம், யாழ்ப்பாணம் | 1899 |
| திராவிட கோகிலம் | சென்னை | 1907 |
| திராவிட பாகதவன் | (தென்கலை வைணவ இதழ்) டி.கே. சீனிவாச அய்யங்கர், சென்னை | 1914 |
| திராவிடன் | தமிழ் நாளேடு ஜனசங்கர கண்ணப்பர் | 1917 |

| | | |
|---|---|---|
| திராவிட மித்திரன் | ஆர். இராசகோபால், சென்னை | 1934 |
| திராவிட நாடு | சி.என். அண்ணாதுரை, காஞ்சிபுரம் | 1942 |
| திராவிட முரசு | நைனாள் | 1947 |
| திராவிடன் | என்.வி. நடராசன் | 1947 |
| திராவிட முரசு | வே. கரிகாலன், கோவை | 1953 |
| திருவிடம் | ஜி.கேசவன், சென்னை | 1954 |
| தமிழன் | ரெங்கசாமி (மாஜினி), மதுரை | 1954 |
| திராவிட மணி | டி.எம்.முத்து,திருச்சி | 1957 |
| தமிழன்குரல் | எஸ்.கே.டி.சவுந்தரபாண்டியன், கோவில்பட்டி | 1957 |
| தமிழர் நாடு | நா.வா.கலைமணி, சென்னை | 1960 |
| திராவிடஸ்தான் | தமிழ் வேந்தன், சென்னை | 1962 |
| தமிழ்நாடு | நாளேடு | 1962 |
| திராவிட யூனியன் | ஏ.முகமது அலி, சென்னை | 1965 |
| தமிழ்மணி | எம்.கே. மணி, சென்னை | 1968 |
| திருவிடம் | ஆர். ஸ்டாலின், அர. திருவிடம் | 1971 |
| தமிழன் | நாளேடு (தி.மு.க.) | 1991 |

மேலே கண்டுள்ள ஏடுகளின் பெயர்கள் எந்தக் கருத்தில், எந்தக் கோட்பாட்டில் 'திராவிட' என்னும் முன்னொட்டுச் சொல்லை இணைத்துக் கொண்டன என அறிவது நல்லது.

1. 1884 முதல் 1934 வரையில், 'திராவிட' என்ற சொல்லை முன்னொட்டாகக் கொண்ட ஏடுகள், தென்னாடு, தெற்குத் திசை நாடு. தென்னாட்டு மக்களுக்கு உரிய சிவனிய மதம், தென்னாட்டுத் தென்கலைப் பார்ப்பனர்களுக்கு உரிய வைணவ மதம் என்பவற்றைக் குறிக்கவே பயன்பட்டுள்ளன. தென்னாடு என்பது உண்மையில் தமிழ்நாட்டைக் குறிப்பதே ஆகும்.

**இது விளைத்தது நன்மையா, தீமையா?**

திராவிட மொழிக் குடும்பக் கோட்பாடு நிறுவப்படுவதற்கு முன்னரே வழக்கில் வந்த திராவிட என்ற சொல் தமிழர் உள்ளிட்ட தென்னாட்டாரை-தென்னாட்டுக்கு மட்டுமே உரிய சமயநெறி முறையைத் தூக்கிப் பிடித்துக் காக்கும் நோக்குட னேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. **இன்று வரையில் இது தமிழர்க்குப் பாதுகாப்பாகவே உள்ளது. தென்னாடு வேறு-வடநாடு வேறு; தமிழர் வேறு-வடஆரியர் வேறு என்பதைப் பிரித்துக் காட்டிட இது பயன்பட்டது; பயன்படுகிறது.**

2. 1917க்குப் பின்னர் திராவிட இயக்க முன்னோர்களால் பயன்படுத்தப்பட்ட 'திராவிடன்', 'திராவிடர்' என்னும் சொற்கள். **இந்து மதத்தில் 100க்கு 96 பேராக உள்ளவர்களை வேறு பிரித்துக் காட்ட, 'பார்ப்பனர் அல்லதார்' என்கிற எதிர்மறைச் சொல்லால் குறிக்கிற இழிவையும் மான மற்ற தன்மையையும் நீக்கிவிட்டு, குறியீட்டுச் சொல்லாக 'திராவிடன்' என்னும் சொல் பயன்பட்டது; இன்றும் பயன் படுகிறது.**

இது மொழிக் குடும்பம் மற்றும் இன அடிப்படையில் கையாளப்பட்டுள்ளது. இதுபற்றி இன்னும் விரிவாகவும், ஆழமாகவும், எழுதிப் போதிய தரவுகள் உள்ளன. ஆயினும், இந்நூலின் தலையாய நோக்கம் அதுவன்று. எனவே விரிவுக்கு அஞ்சி இத்துடன் இக்குறிப்பை நிறுத்திக் கொள்கிறேன்.

இந்திய அளவில் தீண்டாமை, வருண வேறுபாடு, உள்சாதி வேறுபாடு இன்றும் நிலைத்துள்ளது. இதன் உயிர்ச் சத்தாக இருப்பது பார்ப்பனர் அல்லாத எல்லா உள்சாதி யினரும்-சற்சூத்திரர், சூத்திரர், ஆதிசூத்திரர் எல்லோரும் பார்ப்பனியத்தை அன்றாட வாழ்வில் ஏற்றும் நம்பியும் பின்பற்றியும் வருவதும் வழக்கம்தான்.

வடநாட்டில் கி.மு.2ஆம் நூற்றாண்டில் தொடங்கி. கி.பி.5ஆம் நூற்றாண்டில் வலிமை பெற்றுப் பார்ப்பனிய வாழ்க்கை முறை படிந்தது.

அதேபோல் தமிழை வளர்த்த சங்ககாலம் தொடங்கி, பிற்காலச் சோழர், பாண்டியர் காலமான கி.பி.850க்குப் பிறகு 1300க்குள் வலுப்பெற்று, விசயநகர நாயக்கர், மராட்டியர்கள் ஆட்சிக்காலமான 14, 15, 16, 17ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் பார்ப்பனிய வாழ்க்கை முறை கெட்டிப்பட்டுப் படிந்தது. **வடநாட்டைக் காட்டிலும் வைதிகம் தோய்ந்த பார்ப்பனிய மதம் தமிழ்நாட்டிலும் மலையாளத்திலும் நன்கு வேரூன்றியது.**

பார்ப்பனியம் இறுகிப்போன தமிழகத்தில். 1818 முதல் மார்க்க சகாய ஆச்சாரியும், 1865 முதல் வடலூர் வள்ள லாரும். 1872 முதல் அத்திப்பாக்கம் அ. வெங்கடாசல நாயகரும், 1890 முதல் பண்டித அயோத்திதாசரும், 1916 முதல் தென் னிந்திய நல உரிமைச் சங்கமும், 1926 முதல் பெரியாரும் மேற்கொண்ட பணிகளால் பார்ப்பனியம் ஆட்டம் கொடுத் திருக்கிறது. அவ்வளவே.

வடநாட்டில் புரட்சியாளர் மகாத்மா ஜோதிராவ் புலே. சாகுசத்திரபதி, மேதை டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஆகியோர் மேற்கொண்ட பார்ப்பனிய எதிர்ப்பு உணர்வு பிற்காலத்தில் பெரிய அளவுக்குத் தூக்கிப் பிடிக்கப்படவில்லை.

திராவிட இயக்கம் அனைத்திந்திய இயக்கமாக உரு வாக்கப்பட வேண்டும் என, 1945 முதலே பெரியார் விரும்பினார். 1971இல் இதை மிகவும் வலியுறுத்தினார்.

மேதை அம்பேத்கர் தம் வாழ்நாள் முழுவதும் இத் துறைகளில் பெரியாருடன் இணைந்தே செயல்பட்டார். இன்று அம்பேத்கர் அவர்களைப் போற்றுவோரும், பெரியார் அவர்களைப் போற்றுவோரும், மார்க்சியத்தைப் போற்று வோரும், 'திராவிடம்', என்கிற கருத்தாடலுடன் போராடுவது சரிதானா என்பதை நடுநிலையிலிருந்து காணவேண்டும்.

"திராவிட நாடு திராவிடருக்கே" என்கிற கொள்கையை, மனமார 1.11.1956 முதலே பெரியார் கைவிட்டுவிட்டார்

என்பதை, மூடிமறைத்துவிட்டு, "திராவிடம்" என்கிற கருத்தியல் 1500 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர்க்குத் தந்துள்ள மேற்கண்ட தனித்தன்மையையும், நன்மையையும் புறக் கணித்துவிட்டு, சிக்கல் இல்லாத சிக்கலை (Making non-issues as problems) முன்வைத்துப் பார்ப்பனர்க்கும், பார்ப் பனியத்துக்கும் உரம் சேர்த்திட அறிஞர்கள் முயலுவது சரியற்றது ஆகும்.

வெள்ளை ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு இந்தியத் தேசியம்- இல்லாத- ஒரு தேசியம்; இல்லாத "இந்தியா" என்கிற நாடு பயன்பட்டது, உண்மை.

இந்தியா என்பதாக ஒரு நாடு இல்லை என்பதை, இந்திய வரலாற்றில், முதன்முதலில், 1930 மே திங்களில் அடித்துச் சொன்னவர், பெரியார்.

தனித் தமிழ்நாடு என்னும் எண்ணத்துக்கான வித்து, பின்வரும் பேச்சில்தான் பெரியாரால் ஊன்றப்பட்டது. அப்பேச்சு வருமாறு :

"**இந்தியா ஒரு நேஷனா?**

அக்கிராசனரவர்களே! சகோதரர்களே!

இந்தியா ஒரு நாடு என்று ஆனால்தானே, இந்தியா முழுமையும் பற்றிப் பேச நமக்கு உரிமை உண்டு. இப்போது இந்தியா ஒரு நாடாயிருக்கின்றதா?

**இந்தியா சாதிகள் காட்சி சாலையாக, மதக் கண்காட்சி சாலையாக, பாஷைகள் கண்காட்சி சாலையாக, சாமிகள் காட்சி சாலையாக இருக்கின்றதே ஒழிய, வேறு என்ன வாயிருக்கின்றது! இந்த நிலையிலுள்ள இந்தியா, விடுதலையோ முன்னேற்றமோ அடைவது என்பது சாத்தியமானதாகுமா! மற்ற நாட்டார்கள், தங்கள் நாட்டை ஒரு நாடாக்கி நம் நாட்டையும் அதோடு சேர்க்கப் பார்க்கின் றார்கள். யார், எந்த நாட்டோடு சேர்த்துக் கொள்ளுவ தென்று போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள்."**

*(சேலத்தில் சொற்பொழிவு, 'குடிஅரசு' 1.6.1930)*

மிகப் பெரிய படித்த தேசியவாதிகளும், பொதுவுடைமை சித்தாந்திகளும், புரட்சி பற்றிப் பேசும் சிந்தனையாளர்களும் கடந்த 75 ஆண்டுகளில் என்றைக்காவது இதன் உண்மை நோக்கத்தை உணர்ந்து, அவரவர் கட்சியும் இதை ஏற்கச் செய்தார்களா? இல்லை. அப்படி ஏற்கச் செய்யாதது, இந்திய சமூகத்தின் இருப்பு நிலையை-யதார்த்த நிலையை அடியோடு புறக்கணித்ததால் ஏற்பட்டதே ஆகும்.

பெரியார் மேலே சொன்னது ஓர் உண்மை. இந்த மாபெரும் உண்மையை அடியோடு புறக்கணித்துவிட்டு, "இந்தியா ஒரு நாடுதான்" என நம்புவோரும்; மற்றும் **மொழிவழியாகத் தன்னுரிமை பெற்ற குடிஅரசுகள் அமைய வேண்டும் என்போரும் தனிச் சுதந்தர நாடு களாக மாநிலங்கள் பிரிய வேண்டும் என்போரும் உண்மையில் இந்தியா முழுவதையும் கட்டிப்பிடித் துள்ள, பார்ப்பனியம் வீட்டு வாழ்க்கை, சமய வாழ்க்கை, சமுதாயம் ஆகிய துறைகளில் ஆதிக்கம் பெற்றுள்ள தோடு, கல்வி, அரசு நிருவாகம், பொருளாதார அடித்தளமான நில உடைமை அமைப்பு, செல்வம் கொழிக்கும் இன்றைய தொழில்-வணிக அமைப்புகள் எல்லாம் சாதி அமைப்பு என்கிற கட்டுக் கோப்பின் மேல்தான் நிற்கின்றன என்பதை முழுவதுமாக உணர்ந்து, இவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, இவற்றை ஒழிக்கும் நோக்குடன் இணைந்து போராட முன்வந் தால் நன்றாகும்.**

இவற்றை உணரவும், இணைந்து செயல்படவும் தமிழ்த் தேசியர்-அமைப்புத் தன்மையில் வெவ்வேறாக இருப்பினும் ஒரே திசையில் பயணிப்போம் என்கிற சிந்த னையை இக்கருத்துக்கோவை விளைவிக்குமானால், நன்றி பாராட்டுவேன். இத்திசை நோக்கிப் போவோர் இந்நூல் பற்றிக் கூறும் மாற்றங்கள் மற்றும் திருத்தங்களை மனங் கொண்டு ஏற்பேன். நன்றி.


("தன்னுரிமைத் தமிழ்த்தேச எழுச்சி முரசு-நூல்"
முன்னுரை, 2006

## கீழ்ப்பெண்ணாத்தூர் பொ.சுப்பிரமணியன் மறைவு



மா.பெ.பொ.க.வின் திரு வண்ணாமலை மாவட்டச் செயலாளராக நீண்டகாலம் செயல்பட்ட கொள்கையாளர் பொ.சுப்பிரமணியன் 02.06.25 அன்று சாலை நேர்ச்சியில் மறைந்தார் என்பது துயரமான செய்தி. இழப்பால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு புதிய சிந்த னையாளன் தம் இரங்கலைத் தெரிவிக்கின்றது.

## பெரியாரியல் கொள்கையாளர் கொழை மு.பாலகுருசாமி மறைவு



பெரியாரியல் கொள்கை யாளராக இளமை முதல் பயணித்த கொழை மு.பாலகுருசாமி அவர் கள் 08.04.2025 அன்று தம் 67ஆம் அகவையில் மறைந்து விட்டார். அறிஞர் வே.ஆனை முத்து அவர்களிடம் அன்பு பூண்ட தோழரின் இழப்பால் துயருறும் அவரது குடும்பத் தினருக்கு புதிய சிந்தனை யாளன் இரங்கலைத் உரித்தாக்குகிறது.

# போரும் பொருளாதாரமும்




பேராசிரியர் மு. நாகநாதன்

காலம் காலமாகப் போர் அழிவையே ஏற்படுத்தி வருகிறது. பகையையும் பழிவாங்கும் தீய எண்ணங் களையும் வளர்த்து போர் செய்யத் தூண்டுகிறது. தீவிரவாதச் செயல்களைத் தடுப்பதற்குப் பதிலாக அச்செயல்களை ஊக்குவித்து நிரந்தரப்படுத்துகிறது. பெரும்பான்மையான ஏழை எளிய நடுத்தர மக்களின் வாழ்வியலைச் சிதைக்கிறது. வல்லரசுகளின் மரண விளையாட்டுகள்தான் போர்கள். இப்போர்கள் முடிவில் அழிவைத்தான் மக்களுக்கும் இயற்கை வளங்களுக்கும் அளித்து வருகின்றன. பொருளாதாரம் எந்த நாட்டிலும் அமைதியற்றச் சூழலில் வளர்ச்சி அடைவதில்லை. அறிவார்ந்த மக்களின் கருத்துகளைப் போர்கள் புறந்தள்ளி வருகின்றன. அரசின் நிதியாதாரங்களைச் சிதைத்து நீண்ட காலக் கடன் சுமைகளை நாட்டின் மீது போர் திணிக்கிறது.

பொருளாதாரத்தின் முதல் ஆய்வறிஞர் ஆதம் சுமித் 'நாடுகளின் செல்வம்' என்ற நூலில் பழங்காலப் போர்க் களங்களில் சத்தமில்லை; மனிதனின் ஓலம்தான் இருந்தது. புகை இருக்காது; காயங்களுக்கும் மரணங்களுக்கும் கண்ணுக்குப் புலனாகாத காரணங்கள் ஏதுமில்லை. நெருங்கித் தாக்கும் வரை ஆயுதங்கள் தன்னை ஒன்றும் செய்யாது என்று ஒவ்வொரு மனிதனும் நினைத்திருந்தான். (In an ancient battle, there was no noise but what arose from the human voice; there was no smoke, there was no invisible cause of wounds or death. Every man, till some mortal weapon actually did approach him, saw clearly that no such weapon was near him-Adam Smith, *Wealth of Nation*).

ஆடம் ஸ்மித் காலம் தொடங்கி இன்று வரை போர்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளது. பொது நிதியிலிருந்து அதிக நிதி ஒதுக்கீடுகள் போர்களுக்காக ஒதுக்கப்பட்டன. எனவே போர்களுக்காகப் பொதுச் செலவினை அதிகமாக மேற் கொள்ளக்கூடாது என்று பல பொருளாதார அறிஞர்கள் பல நூற்றாண்டுகளாக வலியுறுத்தி வருகின்றனர். பொதுச் செலவைக் குறைக்க வேண்டும் என்ற பொருளியல் கோட்பாடு 18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நாடுகளில் செல்வாக்கினைக் பெறத் தொடங்கியது. எனவேதான் 1786இல் பிரான்சு நாட்டைச் சேர்ந்த லியோன் ஸே என்ற பொருளியல் அறிஞர் அரசு செய்யும் பொதுச் செலவு என்பதே உலகம் தழுவிய கொடியக் கோட்பாடு (The growth of public expenditure was a universal evil) என்றார்.

முதல் உலகப் போரின்போது நாட்டுப்பற்று என்கிற தவறான கருத்தை முன்னிறுத்தி ஐரோப்பிய நாடுகளில் போர்த் தொடுப்பதைச் சரியென்று வாதாடினர். முதல் உலகப் போர் முடிவுற்ற பிறகு ஐரோப்பிய நாடு களில் பெருமளவிலான பொருளாதாரச் சீரழிவுகள் தொடங்கின. காரணம் 3 கோடிக்கு மேல் போர்வீரர்கள் மாண்டனர். ஒரு கோடியே 30 இலட்சம் பொது மக்கள் மாண்டனர். நிதி இழப்பு மட்டும் 2 இலட்சத்து 81 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டாலர்களைத் தாண்டியது. இன்றைய மதிப்பில் பல இலட்சம் கோடி ரூபாயாக மதிப்பிடப் படுகிறது. இக்காலக்கட்டத்தில் இரண்டு அறிஞர்கள் முதல் உலகப் போரினைக் கடுமையாக எதிர்த்தனர்.



பெர்ட்ரண்ட் ரசல்

பெர்னாட் ஷா


மெய்யியல் அறிஞரான பெர்டன்ட் ரசல் முதல் உலகப் போருக்கு எதிராக இங்கிலாந்தில் பரப்புரை செய்தார். போர்களால் எந்தவிதப் பயனும் முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை என்று பல கட்டுரைகளையும் எழுதினார். இங்கிலாந்து நாட்டின் அழைப்பை ஏற்றுப் போர்ப்படையில் இளைஞர்கள் சேரவேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்தார். இதன் காரணமாக பெர்டன்ட் ரசல் 6 மாதச் சிறைத் தண்டனைப் பெற்றார். வன்முறைக்கு எதிராக (Non-violance) பிற்காலத்தில் களம் அமைத்துப் போராடிய காந்தியார் முதல் உலகப் போரின் போது இலண்டன் மாநகரில் தங்கி யிருந்தார். பிரித்தானியப் போர்ப்படையில் சேரும்படி வலியுறுத்தி போர்ப்படையில் சேருவதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றிக் குறிப்பிட்டார். முதல் உலகப் போரில் ஈடுபட்டு 74 ஆயிரம் இந்திய வீரர்கள் மாண்டனர். காந்தியின் இத்தகைய முரண் பாட்டை காந்தியின் நண்பர்கள் உட்பட வெளிநாட்டு அறிஞர்கள் பலர் அதைப் பற்றி கேள்வி எழுப்பிய போது இறுதி வரை காந்தி எவ்வித விளக்கத்தையும் அளிக்கவில்லை.

அறிஞர் ஜார்ஜ் பெர்னாட்ஷா இங்கிலாந்து நாட்டில் முதல் உலகப் போருக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டார். வீணான போர்க் கூச்சலைத் தேசியம் என்று அழைப்பது பித்தலாட்டம் என்றார். பெர்னாட்ஷாவிற்கு எதிராகப் போர் வெறியர்கள் மக்களைத் தூண்டினர். அவரின் நாடகங்கள்

நடைபெறவில்லை. இதன் காரணமாக பெர்னாட்ஷா பல மாதங்கள் வீட்டிலேயே அடைபட்டுக் கிடந்தார். போர் முடிவுற்றதும் ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டம், நோய்கள் ஆகியன பெருகின. பெர்னாட்ஷா போரின் போது கூறிய கருத்துகள் மெய்ப்பிக்கப்பட்டன. பெர்னாட்ஷாவின் நாடகங்கள் போருக்குப் பின் பல நாடக அரங்குகளில் பல ஆண்டுகள் மக்களால் விரும்பிப் பார்க்கப்பட்டன. முதல் உலகப் போர் ஐரோப்பிய நாடுகளிடையே நடைபெற்ற போராகும்.

முதல் உலகப் போர் கற்பித்த பாடங்களை மறந்து ஏகாதிபத்திய நாடுகள் மீண்டும் போர்களில் இறங்கின. 1939ஆம் ஆண்டில் தொடங்கி 1945இல் முடிவுற்ற இரண்டாம் உலகப் போரின் மொத்தச் செலவு அன்றைய அமெரிக்க நாணய மதிப்பில் பல இலட்சம் கோடி ரூபாய்களாகும். 2.5 கோடி இராணுவ வீரர்களும் 2 கோடி மக்களும் உயிரிழந் தனர். இதைத் தவிர ஜப்பான் மீது அமெரிக்கா நடத்திய அணுக்குண்டு தாக்குதல் மிகவும் கொடுமையானது. ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் நடந்த அணுக்குண்டு தாக்குதல்களில் கருங்கற்கள் கூட உருகி கரைந்தன என்பதை இக்கட்டுரையாசிரியர் 2010ஆம் ஆண்டு ஜப்பானின் நாகசாகி நகரில் இயங்கிவரும் போர் நினைவகக் காட்சியகத் திற்குச் சென்றபோது கண்டார். அணுகுண்டு தாக்குதல்களால் மனிதக் குலத்திற்கு ஏற்பட்ட சீரழிவைக் காட்சியகத்திற்குள் வைக்கப்பட்டுள்ள படங்கள் பார்வையாளர்களைக் கண்ணீர் சிந்த வைக்கின்றன. அமெரிக்கா நாட்டைச் சேர்ந்த பல எழுத்தாளர்கள், ஆளுமைகள் உட்பட பல இலட்சம் பேர்கள் அணுகுண்டு வீசுவதனால் ஏற்படும் சீரழிவுகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற கருத்தினை அங்கு வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் எழுதியுள்ளனர்.

போர்களில் ஏற்பட்ட மாபெரும் அழிவுகளுக்காகச் செய்யப்பட்ட பொதுச் செலவினை மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தியிருந்தால் உலகம் பல நன்மைகளைப் பெற்றி ருக்கும்; மானுடத்தின் துயரங்கள் பல நாடுகளில் துடைக்கப் பட்டிருக்கும் என்று பல அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இரண்டாவது உலகப் போருக்குப் பின் ஐக்கிய நாடுகள் மன்றமும் அதன் துணை அமைப்புகளும் தோற்றுவிக்கப் பட்டன. இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட அழிவுகள் எப்போதும் ஏற்படக் கூடாது என்ற தன்மையில்தான் ஐக்கிய நாடுகள் அமைப்பு 1948இல் உலக மானுட உரிமைகள் பிரகடன அறிவிப்பை வெளியிட்டது. இந்தப் பிரகடனத்தை பிரெஞ்சு நாட்டைச் சார்ந்த சட்ட அறிஞர் ரெனே காசினும் உலகப் போரின்போது அமெரிக்கா நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்த ரூஸ்வெல்டின் துணைவியார் எலினாரும் இணைந்து இரவு பகலாகப் பணியாற்றி இந்தப் பிரகடன ஆவணத்தை உருவாக்கினர். அப்போது போதிய மின் விளக்கு வசதிகள் கூட இல்லாத நேரமாகும். மெழுகுவர்த்தியை வைத்துக்கொண்டு இந்த ஆவணத்தை எழுதி விரைந்து முடித்தனர். அப்போது ரெனே காசின் மனிதனின் மனம் மாறக்கூடியது. இந்தப் போர் அழிவைக் கண்டு துடிதுடித்த மனங்களின் உணர்வுகள் மறையும் முன்பே மானுட



உரிமைப் பிரகடனத்தை (Universal Declaration of Human Rights, 1948) நாங்கள் ஓய்வின்றி எழுதினோம் என்று குறிப்பிட்டார்.

போர்க்காலத்தில் ஏற்பட்ட பொருளாதாரக் கட்டமைப்பு களைச் சீரமைப்பதற்காகதான் பன்னாட்டு நிதியம், உலக வங்கி போன்ற நிதி அமைப்புகள் 1944இல் உருவாக்கப் பட்டன. முதலாளித்துவத்தை முழுமையாக ஆதரித்த இங்கிலாந்தைச் சேர்ந்த பொருளாதார அறிஞர் கீன்சு அமெரிக்காவின் பிரிட்டன்வுட்ஸ் நகரில் பல நாடுகள் கலந்து கொண்ட இந்த அமைப்புகளின் முதல் கூட்டத்தில் உரை யாற்றிய கீன்சு மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சிக்காக இந்த நிதியங்கள் தாராளமாக நிதி உதவிகளை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். போர் செய்யும் நாடுகள் (Warfare Governments) தங்களின் நிலையை மாற்றிக் கொள்ள வேண்டும். மக்கள் நல அரசுகளாகச் (Warfare Governments) செயல்பட வேண்டும் என்றும் கீன்சு குறிப் பிட்டார். ஆனால் போர்கள் தொடர்ந்தன. 1950க்குப் பிறகு போர்கள் மீண்டும் வெடித்தன. கொரியப் போர், வியட்நாம் போர், இந்திய பாகிஸ்தான் போர்கள் (1965, 1971, 2002, 2025), ஈரான்-ஈராக் போர், ஆப்கன் போர், வளைகுடாப் போர், இசுரேல்-பாலஸ்தீன போர்கள், இரஷ்யா-உக்ரைன் போர் போன்ற பல போர்கள் தொடந்தவண்ணமே உள்ளன.

போர்கள் புதிய புதிய தொழில்நுட்பங்களைப் பயன் படுத்தி மக்களை, பொருளாதாரத்தை, இயற்கை வளங்களை, சுற்றுச்சூழல்களைப் பெருமளவில் அழித்துச் சீர்கேடுகளை உருவாக்கி வருகின்றன. உலக நாடுகளில் சீர்கேடுகள் இல்லாத நாடுகளே இல்லை என்ற சூழல் தற்போது உருவாகி வருகிறது. சான்றாக இசுரேல்-காசா போரில் பயன்படுத்தப் பட்ட போர்க் கருவிகளால் ஏற்பட்டச் சுற்றுச்சூழல் கேடுகளின் அளவானது முதல், இரண்டாம் உலகப் போர்களில் ஏற்பட்ட இயற்கை மானுடச் சீரழிவை விஞ்சிவிட்டது என்பதைப் பல புள்ளிவிவரங்கள் விளக்குகின்றன.

பொது நிதியியல் என்பது முழுமையாகச் சிதைக்கப்பட்டு வருகிறது. அரசின் பொதுச் செலவில் போருக்கான செலவு

பன்மடங்காகப் பெருகி வருகிறது. நாடுகளின் வரி வருவாயைக் காட்டிலும் நாட்டின் பொதுக்கடன் பெருகி வருகிறது. நாட்டின் நிதியியலின் கூறுகள் நாளும் சிதைக்கப்பட்டு ஆயுதத் தளவாடங்களின் செலவிற்காக அதிக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன (Public Finance has become war Finance). உலகின் வளர்ந்த நாடாகத் தன்னைப் பறைசாற்றிக் கொள்ளும் அமெரிக்காவின் ஒட்டுமொத்த நாட்டு வருமானத்தைவிட அதன் கடனளவு அதிகரித்து உள்ளது. இதே நிலைமைதான் ஐரோப்பிய நாடுகளிலும் உள்ளது.

இக்கட்டுரையாசிரியர் 2001ஆம் ஆண்டு டிசம்பர் 25 அன்று ஆங்கில இந்து நாளேட்டில் திறந்த பகுதியில் Economics of War என்ற கட்டுரையை எழுதியிருந்தார். அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்த அளவு வீதங்களை காட்டிலும் இந்தியா உட்பட பல நாடுகளில் போர்ச் செலவுகள் பெருகி வருகின்றன. போர்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவே சுவிடன் நாட்டின் தலைநகரான ஸ்டாக் ஹோமில் செயல்பட்டு வரும் அமைதிக்கான பன்னாட்டு ஆய்வு நிறுவனம் (Stockholm International Peace Research Institute, (SIPRI)) 1966ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. நோபல் பரிசு பெற்ற புகழ்மிக்க பொருளாதார அறிஞரான குன்னர் மிர்தல் இந்த அமைப்பின் தலைவராக 1967 முதல் 1973 வரை பொறுப்பேற்றிருந்தார். மிர்தல் வியட்நாம் மீது போர் தொடுத்தபோது அமெரிக்காவைக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டவர். உலகில் மத அடிப்படையில் பிளவுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் 1933இல் முதன்முதலாக மானுட அறிக்கை வெளியிடப்பட்டது. 1973இல் வெளியிடப்பட்ட இரண்டாம் மானுட அறிக்கையில் கையொப்பமிட்ட அறிஞர்களில் மிர்தலும் ஒருவர். அவ்வறிக்கையில் எந்தக் கடவுளும் நம்மைக் காப்பாற்றாது, நாம்தான் நம்மைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் நமக்கு நாமே பொறுப்பு என்ற மேற்குறிப்பிட்ட கருத்தியலே வலியுறுத்தப்பட்டுள்ளது.

தனியார்மயமாக்கல், தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் என்ற திட்டம் 1991இல் தொடங்கியது. 1995ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாள் அன்று உலக வர்த்தக அமைப்பு (World Trade Organization) வரித் தடைகள், வர்த்தகத் தடைகள் நீக்கி உலகளவிலான வணிகத்திற்குச் சமமான சந்தையை உருவாக்கும் நோக்கத்தோடுதான் உருவாக்கப் பட்டது. ஆனால் போர்ச் செலவுகள் பற்றி உலக வர்த்தக நிறுவனத்தின் கொள்கைகளில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. உலகில் பொருட்களின் சந்தைகளோடு ஆயுத உற்பத்திச் சந்தைகளும் பெருகின; குறைக்கப்படவில்லை. தனியார் ஆயுத உற்பத்தியின் அளவு பல இலட்சம் கோடி களைக் கடந்து தொடர்ந்து வளர்ந்து வருகிறது. இதற்கு உலகளவில் எந்த நாடும் எவ்விதத் தடையும் விதிக்க முன் வரவில்லை. ஆனால் 2025இல் அமெரிக்கக் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு டிரம்ப் ஓர் உலக வர்த்தகப் போரைத் தொடங்கியுள்ளார். இதன் காரணமாக உலக வர்த்தக அமைப்பின் குறிக் கோள்கள் முழுமையாகத் தகர்க்கப்பட்டுவிட்டன.

இந்தியா, சீனா, கனடா, வியட்நாம், ஜெர்மனி போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அதிக வரியை அறிவித்தார் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் டிரம்ப். இதனால் இந்தியப் பங்குச் சந்தையில் மட்டும் 7 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்குச் சரிவுகள் ஏற்பட்டன. பன்னாட்டு நிதியம் உலகளவிலான பொருளாதார வளர்ச்சி சராசரியாக 2.8 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடு அளவிற்குச் சரிவைச் சந்திக்கும் என்று தனது கணிப்பை வெளியிட்டுள்ளது.

அமெரிக்கப் பொருளாதாரம் 1930களில் கண்டது போன்று ஒரு பெரு வீழ்ச்சியைச் சந்திக்கும் என்று பல பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கை செய்த பிறகு டிரம்ப் தனது வரிக்கொள்கையை மாற்றிக்கொண்டு சீனாவுடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தியுள்ளார். ஆனால் ஐரோப்பிய நாடுகளோடு ஒரு வர்த்தகப் போரை அறிவித்துள்ளார். உலகளாவியப் பொருளாதாரச் சரிவை நோக்கிச் செல்லும் இத்தகையச் சூழலிலும் இந்தியா-பாகிஸ்தான் போர் நான்கு நாட்களில் முடிவுற்றது வரவேற்கத்தக்கதாகும். ஆனால் போரென்றால் இழப்புகள் இல்லை என்று யாரும் கூற முடியாது. ஒருவரை ஒருவர் பழிச் சுமத்தும் போக்குத்தான் போரில் முதன்மைக் கொள்கையாகச் செயல்படும். உண்மைகள் போர் எனும் இருளில் மறைந்துவிடும். இந்தியா-பாகிஸ்தான் போரை நான்தான் நிறுத்தினேன் என்று இதுவரை 13 முறை அறிவித்த டிரம்ப் இசுரேல்-காசா போரைப் பற்றிக் கண்டும் காணாமல் இருக்கிறார். காசாவில் இசுரேல் நடத்தும் போர் வெறியாட்டத்தை நிறுத்த முன்வரவில்லை. இரஷ்யா-உக்ரைன் போர் 2022இல் தொடங்கி இன்றும் முடியவில்லை.

ஏழ்மை வறுமை ஏற்றத்தாழ்வுகள் இன்று உலகளாவிய பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ள நேரத்தில் போர் எவ்வகை ஆபத்தானது என்பதைப் பல வல்லுநர்கள் தொடர்ந்து சுட்டி வருகின்றனர். குறிப்பாக ஜோசப் ஸ்டிக்லிசும் லிண்டா பிலிம்சும் இணைந்து 145 இலட்சம் கோடி செலவில் ஒரு போர் (The Three Trillion Dollar War – The True cost of the Iraq Conflict, P.206, 2008) என்ற நூலை 2008இல் எழுதினர். ஈராக் நாட்டின் மீது அமெரிக்கா போர் தொடுத்து ஒரே ஆண்டிற்குள் செய்த செலவு 145 இலட்சம் கோடி ரூபாய் என்று மதிப்பீடு செய்தனர்.

இந்நூலில் அமெரிக்க அரசிற்கு 18 பரிந்துரைகளை நூலாசிரியர்கள் வழங்கியுள்ளனர். இந்தப் பரிந்துரைகள் இந்திய நாட்டிற்கும் பொருந்தும். தனியார்த் துறையில் ஆயுத உற்பத்தியைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பது இந்தப் பரிந்துரைகளில் முதன்மையான ஒன்று. முதலாளித்துவத்தை ஏற்றுக்கொண்ட இந்த இரு பொருளாதார அறிஞர்களும் தனியார்த் துறையில் ஆயுத உற்பத்தியை அனுமதித்தால் உலகில் போர் நிற்காது என்பதை உணர்ந்து கொண்டுள்ளனர். இதற்குக் காரணம் தனியார்த் துறையில் உற்பத்தி செய்யப்படும் ஆயுதத் தளவாடங்கள் கள்ளச் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன. போர் நடை

பெறும் பகுதிகளில் இந்த வணிகம் பெருகி வருகிறது. இதனால் மானுடத்திற்குப் பேராபத்து என்பதை அமைதியை விரும்பும் பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சுட்டிக்காட்டி வருகின்றன.

ஸ்டாக்ஹோம் அமைதிக்கான பன்னாட்டு ஆய்வு நிறுவனம் ஆண்டுதோறும் உலக அளவில் உற்பத்தி செய்யப்படும் ஆயுதத் தளவாடங்களைப் பற்றியும் ஆயுதத் தளவாடங்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் நாடுகள் பற்றியும் தொடர்ந்து புள்ளிவிவரங்களை வெளியிட்டு வருகிறது. 2024ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி ஆயுதத் தளவாடங்களை இறக்குமதி செய்த நாடுகளின் வரிசைப் பட்டியலில் உக்ரைன் முதலிடத்திலும் இந்தியா இரண்டாம் இடத்திலும் உள்ளன. எல்லாவிதப் போர் ஆயுதங்களையும் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் தனியார் ஆயுத நிறுவனங்கள் இலஞ்சப் பணத்தை வாரி இறைத்து ஆயுதத் தளவாடங்களின் விலைகளைப் பன்மடங்காக உயர்த்தி மோசடி செய்து வருகின்றன. போபர்சு பீரங்கி தொடங்கி ரபேல் விமான கொள்முதல் செய்தது வரை பல கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்கின்றன. ஆனால் ஒன்றிய அரசு தனது அதிகாரப் பலத்தை வைத்து இத்தகைய குற்றச்சாட்டுகளை மூடி மறைத்து வருகிறது.

இந்தியாவின் பொருளாதாரம் சரிவை நோக்கிப் பயணம் செய்கிறது. அந்நிய முதலீடுகள் பல இலட்சம் கோடி ரூபாய் திரும்பப் பெறப்படுகின்றன. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்களின் முதலீடுகளை எடுத்துக் கொண்டு கடந்த 5 ஆண்டுகளாக இந்தியாவை விட்டு வெளியேறி வருகின்றனர். பல இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் வெளியேறி உள்ளன. வெளியேறிய முதலீடுகளின் மதிப்பு 353 மில்லியன் டாலர் என்று இந்து நாளிதழில் 23-5-2025 அன்று வெளி வந்துள்ளது.

இந்தியாவின் கடன் தொகை ஒரு பக்கத்தில் பெருகி வருகிறது. கடந்த பத்தாண்டுகளில் பிரதமர் நரேந்திர மோடி ஆட்சியில் 174 விழுக்காடு அளவிற்கு ஒன்றிய அரசின் கடன் அளவு பெருகியுள்ளது. 2013-14ஆம் ஆண்டில் பிரதமர் மன்மோகன் சிங் ஆட்சியில் இருக்கும் போது கடன் தொகை 58.6 இலட்சம் கோடி ரூபாய் அளவில் இருந்தது. 2023இல் நரேந்திர மோடி ஆட்சியில் 155.6 இலட்சம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 57.1 விழுக்காடு அளவிற்கு உயர்ந்துள்ளது.

இச்சூழலில் போர் என்பது எத்தகைய பொருளாதாரப் பின்னடைவை ஏற்படுத்தும் என்பதை ஸ்டிக்லிசு கூறிய கீழ்க்கண்ட கருத்தின் வழியாக அறிந்து கொள்ள முடியும். போர் தொடுப்பதை எளிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. மற்ற கூறுகளிலிருந்து வேறுபட்டு பெரிய அளவிலான பொறுமையுடனும் அதிக எச்சரிக்கையுடனும் மிகுந்த விழிப்புடனும் செயல்படுத்தும் நடவடிக்கையாகத்தான் இருக்க வேண்டும். ஊடகங்கள் எழுப்பும் இடைவிடாத கூக்குரல், அரசு ஆரவாரங்கள் தேசியத்தைத் தூண்டும் விதமாகக் கொடி அசைத்தல், பொறுப்பற்ற சாகசங்களை மேற்கொள்ளு தல் போன்றவற்றைத் தவிர்த்து நோக்கினால் போர் என்பது ஆண்களையும் பெண்களையும் கொன்று குவிப்பதாகும். அவர்களை முடமாக்கி செயலிழக்கச் செய்யும் கொடுஞ் செயலாகும். இதற்கான செலவுகள் துப்பாக்கியின் கடைசி குண்டு வெடித்த பிறகும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

போர் எரிபொருள் விலையை உயர்த்தும். அரசு நிதியில் பெரும் சரிவுகளை ஏற்படுத்தும். முதலில் கல்வி, சாலை வசதி, ஆய்வு போன்ற நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான நிதியை மடைமாற்றிப் போருக்காகச் செலவிடும் நிலையை உருவாக்கும். பெரும்பாலான பொருளாதார அறிஞர்கள் போருக்காகச் செலவிடும் மொத்த செலவின் விளைவுகளை ஆய்வதில்லை. போர்ச் செலவில் மறைந்திருக்கும் பல உற்பத்திச் செலவுகளையும் ஆய்வதில்லை. போரில் ஈடுபட்டு முடமாக்கப்பட்டவர்கள் இறந்தவர்களின் குடும்பத்திற்கு அரசு செய்யும் நீண்டகாலச் செலவினையும் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. போர்ச் செலவிற்காக அரசு எழுப்பும் கடன்கள், அதனால் பெருகும் கடன் தொகை வட்டித் தொகையையும் கணக்கிடுவதில்லை என்பது போன்ற எண்ணற்ற போர் செலவு தொடர்பான காரணிகளைக் கணக்கிட்டு ஜோசப் ஸ்டிக்லிசும் லிண்டா பிலிம்சும் அமெரிக்கா 145 இலட்சம் கோடி ரூபாயை ஒரே ஆண்டில் செலவிட்டு ஈராக் போரை நடத்தியது தவறு என்று புள்ளிவிவரங்களோடு வாதிட்டுள்ளனர்.

போர்ச் செலவினைக் கட்டுப்படுத்த இந்நூலாசிரியர்கள் 2008இல் அளித்த பரிந்துரைகளை அமெரிக்க அரசு ஆய்வு செய்ய மறுத்ததனால் 2024ஆம் ஆண்டின் புள்ளிவிவரப்படி அமெரிக்காவின் கடன் சுமை அமெரிக்காவின் தேசிய வரு மானத்தைக் காட்டிலும் 121.28 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

கடன் என்பது எதிர்காலத் தலைமுறையினர் மீது விதிக்கப்படும் வரி என்று தொன்மைப் பொருளாதார அறிஞரான டேவிட் ரிகார்டோ 19ஆம் நூற்றாண்டின் தொடக் கத்தில் குறிப்பிட்டார். இதை ஜேம்ஸ் புக்கனன் உள்ளிட்ட பொது நிதியியல் அறிஞர்கள் வழிமொழிந்துள்ளனர். எனவேதான் காரல் மார்க்சு 'வரி போராட்டம் என்பது ஒரு வகையான வர்க்கப் போராட்டமே' (tax struggle can be seen as one form of class struggle) என்று கூறினார். மக்கள் வரிச்சுமை, கடன் சுமை ஆகியவற்றை உணரக்கூடாது என்பதற்காகத்தான் சாதி மத பிளவுகள் ஊக்குவிக்கப்பட்டு மக்களின் கவனம் திசைத் திருப்பப்படுகிறது.

போர் என்பது மனித உயிரிழப்புகள், இயற்கை வளங்கள் அழிப்புகள், சுற்றுச்சூழல் பாதிப்புகள் போன்ற அனைத்துக் கூறுகளையும் உள்வாங்கிப் பொருளாதாரத் தையும் மானுடத்தையும் சிதைத்துவிடும் என்பதுதான் மெய்ப்பிக்கப்பட்ட உண்மை.

**போர் வெறித் தவிர்ப்போம்;**
**மானுட நெறிகளைப் போற்றுவோம்.** ❖

# பெரியார் முதலாவதாக வெளியிட்ட
# குடிஅரசு ஏட்டின் மரபு

**என்.சாய்சரண்**

1920களில் இந்தியத் தேசியக் காங்கிரசில் இருந்த பேராளுமையாளரான பெரியார் (கள்ளுக் கடை மறியல்) போராட்டத்திற்குத் தலைமை ஏற்றதற்காக கோவை சிறை யில் அடைக்கப்பட்டிருந்தார். அதிகாரத்தைக் கண்டு அஞ்சிடாமல் உண்மைகளை வெளிப்படுத்திட ஓர் இதழ் தொடங்கிட சிறையிலேயே திட்டமிட்டார். சுயமரியாதை இயக்கத்தின் பேரிகையாகவும் சமூகத் தீமைகளை எதிர்க்கும் போர்க் குரலாகவும் 'குடிஅரசு' உதித்தது.

ஒரு நூற்றாண்டுக்கு முன், பெரியார் ஈ.வெ. இராமசாமி கோவை சிறைக் கொட்டிலில் அடைத்து வைக்கப்பட்டிருந்த போது, "அதிகாரத்திற்கு அஞ்சிடாமல் உண்மைகளை விளம்பு வதற்காக" ஓர் இதழ் வெளியிடச் சிந்தித்தார். அந்தச் சிந்த னையின் செயல்வடிவமாக வெளிவந்த தமிழ்க் கிழமை ஏடான குடிஅரசு, சுயமரியாதை இயக்க பேரிகையாக மட்டுமின்றி, சாதி ஒடுக்குமுறை, பிரித்தானிய குடியேறிகளின் அடக்குமுறை, சமயப் பழமைவாதம் ஆகியவற்றை எதிர்த்துப் போரிடும் தளமாகவும் திகழ்ந்தது.

1920களில் பெரியார் இந்தியத் தேசியக் காங்கிரசில் பெருந்தகைமையராக விளங்கிய போது, அவர் தலைமையில் போராட்டம் நடத்தியமைக்காக சிறையில் அடைக்கப்பட்டார். நியாயமான கருத்துகளைத் துணிவுடன் வெளிப்படுத்த வலிமையான ஊடகத்தின் தேவை பற்றி, இந்தச் சிறைவாச காலத்தில் அவருடன் சிறையிலிருந்த உடன் போராளியான வ.மு. தங்கபெருமாள் பிள்ளையுடன் கலந்து பேசினார். இந்த எண்ணத்தின் விளைவாகத் தோன்றியதே குடிஅரசு. அது சமூகநீதி மற்றும் பகுத்தறிவுப் போராட்டத்திற்கான முக்கியக் கருவியாயிற்று.

பெரியார் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதும் 1923 சனவரி 19 அன்று 'குடிஅரசு' என்ற பெயரினை முறைப்படி பதிவு செய்தார். இதனை சா.சு. இளங்கோ "குடிஅரசு ஏட்டில் புரட்சிக் கவிஞர் கவிதைகள்" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**முதல் இதழ்**

சென்னை பெரியார் திடலில் உள்ள பகுத்தறிவு நூலகம் மற்றும் ஆராய்ச்சி நடுவத்தின் ஆவணக் காப்பகத்தில் கிடைக்கும் குடிஅரசு இதழ்களைக் கவனத்துடன் படித்ததில், குடிஅரசு முதல் இதழ் 1925 மே 2ஆம் நாள் (காரிக்கிழமை) வெளியிடப்பட்டுள்ளது. அத்தொடக்க விழாவில், திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடத்தின் தலைவர் திருவளர் திரு. சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள், "உயர்ந் தோர்-தாழ்ந்தோர் மனப்போக்கை ஒழித்திடவும் சமன்மை உணர்வைப் பரப்பவும் பாடுபட்டால் மிகவும் மகிழ்வேன்" என்று பேசினார்.

அவ்விழாவில் பேசிய பெரியார், அச்சத் தினாலோ, ஒரு பக்கச் சாய்வினாலோ நியாயமான கருத்துகளை வெளிப் படுத்தத் தயங்குகின்ற மற்ற இதழ்களின் போக்கைச் சாடினார். முதல் இதழில் அவர் எழுதிய ஆசிரியவுரையில், "நம் தாய் நாடு அரசியல், பொருளியல், சமுதாயவியல் என அனைத்துத் துறைகளிலும் சிறந்தோங்கி ஒளிர்ந்திட வேண்டும் என்ற நோக்கத்துடனே குடிஅரசு இதழ் தொடங்கப்பட்டுள்ளது" எனக் கூறியிருந்தார்.

பெரியாரையும் தங்கபெருமாள் பிள்ளையையும் இணை ஆசிரியர்களாகக் கொண்டு, ஈரோட்டில் இருந்து குடிஅரசு இதழ் வெளியானது. இரண்டாம் இதழிலிருந்து ஞாயிற்றுக்கிழமை தோறும் என வெளியிடப்பட்டது. ஆனால் 1943 முதல், இதழ் வெளியாகும் நாள் சனிக்கிழமை என மாற்றம் பெற்றது. இதழ் தொடங்கப்பட்ட சில மாதங்களில், காங்கிரசுத் தலைவர் களுக்கும் பெரியாருக்குமிடையிலான முரண்பாடு முற்றியது. எனவே 1925இல் பெரியார் கட்சியை விட்டு வெளியேறினார். அதன்பின், பெரியார் சுயமரியாதை இயக்கப் பணிகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்; குடிஅரசு இயக்கச் செய்தி ஏடு ஆயிற்று.

தொடக்க ஆண்டுகளில் இதழில் ஆசிரியரின் பெயர் "ஈ.வெ. இராமசாமி நாயக்கர்" என அச்சிடப்பட்டது. 1927 திசம்பர் 18க்குப் பின்பு பெயருக்குப் பின்னால் இருந்த சாதிப் பெயர் நீக்கப்பட்டது.


குடிஅரசு
[வாரப்பதிப்பு]

இதழின் தொடக்க ஆண்டுகளில் பரந்துபட்டக் கருத்துகளைத் தெரிவிக்கும் காட்சிகளைக் கொண்டிருந்தது. மேலட்டையில் பாரதத்தாய், உழவர்கள், தொழிலாளர்கள் மற்றும் இந்து, கிருத்துவம், இசுலாம் பற்றிய சமயக் குறியீடுகள் இடம்பெற்றி ருந்தன. 1926 ஏப்பிரல் முதல் 1927 திசம்பர் வரை 'மகாத்மா காந்தி வாழ்க', 'கதர் வாழ்க' ஆகிய முழக்கங்களும் மேற் சொன்ன படங்களுடன் இடம்பெற்றிருந்தன. பெரியார் காங்கிரசை விட்டு வெளியே வந்த பின்னரும் காந்தியா ருடைய திட்டங்களான கதர் இயக்கம் முதலானவற்றை ஆதரித்து எழுதியதுடன் அவற்றின் சிறப்பினை உணர்த்தும் நூற்பு இராட்டினம் படத்தை இடம்பெறச் செய்தார். அத்துடன் அவை சாற்றும் கருத்தியலை அப்படங்களின் அடியில் இடம்பெற்றிருந்தன.

தொடக்கத்தில் குடிஅரசு இதழின் விலை ஓர் அணா (ரூபாயில் 16இல் ஒரு பங்கு)வில் இருந்து ஒன்றரை அணா வாகவும் பின்னர் இரண்டு அணா எனக் காலப்போக்கில் உயர்த்தப்பட்டது. 1943 அக்டோபர் 30 வரை மகளிருக்கும் ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களுக்கும் பாதி விலையில் குடிஅரசு வழங்கப்பட்டது.

பி.ஆர். அம்பேத்கர், இராபர்ட் கிரீன் இங்கர்சால், பெட்ரண்டு ரசல், ஜார்ஜ் பெர்னார்டு ஷா, காரல் மார்க்சு, பிரெடரிக் எங்கெல்சு, வால்டேர், ஜீன் ஜாக் ரூசோ போன்ற சிறந்த சிந்தனையாளர்களின் நூல்களைத் தமிழாக்கம் செய்து வெளியிடுவதில் குடிஅரசு பதிப்பகம் முக்கியப் பங்காற்றியது.

**தெளிவான நோக்கங்கள்**

தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, பெண்ணுரிமை, சோசலிசம், நாத்திகம், உழைப்பாளர் நலன், மூடநம்பிக்கை ஒழிப்பு ஆகிய நோக்கங்கள் தெளிவாகவும் உறுதியுடனும் முன்வைக்கப்பட்டன.

சி. இராசகோபாலாச்சாரி, ம. சிங்காரவேலர், கி.ஆ.பெ. விசுவநாதம், திரு.வி. கலியாணசுந்தரனார், மறைமலை அடிகளார், க.ந. அண்ணாதுரை (அறிஞர் அண்ணா), மு. கருணாநிதி (கலைஞர்) ஆகியவர்களும் குடிஅரசு இதழில் எழுதியவர்கள். முதனமையான பெண் செயற்பாட்டாளர் களான மூவலூர் இராமாமிர்தம், குஞ்சிதம் ஆகியோர் குடிஅரசு இதழில் எழுதி வந்ததையும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நினைவுகூர்கிறார். திருக்குறளையும் பாரதியார் பாடல்களை யும் குடிஅரசுப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. எழுத்தறிவு பெற்ற மக்கள் ஏழு விழுக்காடாக இருந்த அக்காலத்தில் பெரியார் முற்போக்கான கருத்துகள் பலவற்றைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

நாகை காளியப்பன் உள்ளிட்ட பெரியாரின் தோழர்கள் மலேசியா சென்று அங்குள்ள தமிழர்களிடம் குடிஅரசு இதழுக்கு உறுப்பினர் கட்டணங்கள் (சந்தாக்கள்) திரட்டிக் கொண்டு வந்தனர் என்பதையும் திரு. இராசேந்திரன் தெரிவிக்கிறார். மார்க்சு-எங்கெல்சு எழுதி வெளியிட்ட பொதுவுடைமைக் கட்சி அறிக்கையையும் சோவியத்து ஒன்றியத்தின் அய்ந்தோண்டு திட்டத்தையும் பெரியார் தமிழாக்கம் செய்து வெளியிட்டுள்ளார். அம்பேத்காரின் 'சாதி ஒழிப்பு' நூலை இந்திய மொழிகளில் முதலாவதாகத் தமிழில் குடிஅரசு இதழில் வெளியிடப்பட்டது.

**தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்**

1935 சனவரி 13 நாளிட்ட இதழில் அறிமுகம் செய்யப் பட்ட சீர்திருத்திய தமிழ் எழுத்துகளை (15) குடிஅரசு அப்போதிருந்தே பின்பற்றி வந்தது. அவ்விதழின் துணிவான கருத்துகள் காரணமாக அதிகார வர்க்கத்துடன் அடிக்கடி மோதல் ஏற்பட்டது. 1933 திசம்பர் 30 இதழில் ''இன்றைய ஆட்சிமுறை ஏன் ஒழிய வேண்டும்?'' என்று தலைப்பிடப் பட்ட ஆசிரியவுரை எழுதியமைக்காகப் பெரியார் கைது செய்யப்பட்டார் (ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது). இதழின் வெளியீட்டாளர் என்பதற்காகப் பெரியாரின் தங்கை கண்ணம்மாள் கூட சிறைப்படுத்தப் பட்டார்.

குடிஅரசு இதழ் குறுகிய காலம் (19.11.1933 இதழுக்குப் பின் 12.01.1935 வரை) தடை செய்யப்பட்டிருந்தது. மீண்டும் 13.01.1935 முதல் தொடர்ந்து வெளியிடப்பட்டது. குடிஅரசு தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் பெரியார் 26.11.1933 முதல் 'புரட்சி' கிழமை இதழும் (அதுவும் 17.06.1934 முதல் நிறுத்தப்பட்டதால்) 26.08.1934 முதல் 'பகுத்தறிவு' இதழும் வெளியிட்டார். அதன்பின் இரண்டாம் உலகப் போர் காரணமாக 1941, 1942 ஆண்டுகளில் இதழ் நீண்டகாலம் நிறுத்தப்பட்டு, பின்னர் வெளியிடப்பட்டது. சுமார் 24 ஆண்டுகள் வெளிவந்து கொண்டிருந்த குடிஅரசு 1949 நவம்பர் 05 இதழுடன் விடைபெற்றுக் கொண்டது.

(06.06.2025 நாளிட்ட The Hindu ஏட்டில் வெளியான கட்டுரை)

❖ தமிழாக்கம் : சா. குப்பன்

## பணிநிறைவு பாராட்டு விழா




அரக்கோணம் வட்டார கல்வி அலுவலர் திரு. கோ.தேவ நாதன் அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழா மற்றும் மணிவிழா , அரக்கோணத்தில் 29-03-2025 அன்று சிறப்புற நடைபெற்றது. தோழர். க.குப்புசாமி அவர்கள் தனது குடும் பத்துடன் கலந்துகொண்டு வாழ்த்தி சிறப்புரையாற்றினார். இதன் மகிழ்வாக திரு. கோ.தேவநாதன் அவர்கள், புதிய சிந்தனையாளன் வளர்ச்சி நிதிக்கு ரூ.2000/- வழங்கினார்.

# வேலூரில் 20.04.2025 அன்று அறிஞர் வே. ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு விழா

20.04.2025 ஞாயிறு காலை 10 மணி முதல் மாலை 7 மணிவரை வேலூர், காட்டுப்பாடியில் உள்ள நாராயணா திருமண மண்டபத்தில் 08.07.2024இல் மறைந்த வேலூர் தன்மான மறவர் நா.ப. செந்தமிழ்க்கோ அரங்கத்தில் ஆய்வறிஞர் வே. ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு விழா சீரிய முறையில் நிகழ்வுற்றது.

முற்பகல் நடைபெற்ற பொது அரங்கத்திற்கு மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமைக்குழு உறுப்பினர் மு.சுவாமிநாதன் தலைமையேற்றார். மா.பெ.பொ.க. வேலூர் மாவட்டச் செயலாளர் மோ.சி. சங்கர் வரவேற்புரையைத் தொடர்ந்து, தலைவர் தலைமையுரையாற்றினார். வேலூர் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தின் வேந்தரும் தமிழியக்கத்தின் தலைவருமான முனைவர் கோ. விசுவநாதன் விழாவின் தொடக்கவுரையாக சிறந்த சொற்பொழிவாற்றினார்.

'சூலூர் பாவேந்தர் பேரவை' எனும் கலை, இலக்கிய, பண்பாட்டு அமைப்பு 13.04.1988 முதல் 37 ஆண்டுகளாக இயங்கிக் கொண்டுள்ளது. சூலூர், கலங்கல் பாதையில் இவ்வமைப்பிற்கென ஒரு கட்டடம் உள்ளது. அதன் மாடியில் சூலூர் பொறியாளர் சூ.ந. பன்னீர்செல்வம் தம் செலவில் கட்டிய அரங்கத்திற்கு "தோழர் வே. ஆனைமுத்து அவைக் கூடம்" எனப் பெயர் சூட்டி, 14.04.2009 அன்று திறக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சூலூரில் இருந்து க.தேவராசு உள்ளிட்ட தோழர்களுடன் விழாவிற்கு வந்திருந்த சூ.ந. பன்னீர்செல்வம் அவர்களின் செயலைப் பாராட்டி தமிழியக்கத்தின் தலைவர் கோ. விசுவநாதன் மேடையில் நூல் பரிசளித்துப் பாராட்டினார்.

தொடர்ந்து திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் துணைப் பொதுச் செயலாளர் ஆ. சிங்கராயர், மா.பெ.பொ.க. இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் க. குப்புசாமி, காஞ்சிபுரம் மா.து. செயலாளர் தீ. கோபாலகிருட்டிணன் ஆகியோர் உரையாற்றினர். சூலூர் பாவேந்தர் பேரவை நிறுவனரும் நெறியாளருமான புலவர் செந்தலை ந. கவுதமன் எழுச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்த சீரிய சொற்பொழிவாற்றினார்.

அடுத்து திராவிடர் கழக மாவட்டக் காப்பாளர் வி. சடகோபன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வேலூர் மாவட்டச் செயலாளர் பிலிப், மா.பெ.பொ.க. அரியலூர் மா.செ. தமிழ். இளவரசன், பாலாறு பாது காப்பு சமூக விழிப்புணர்வு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ச.ந.ச. மார்த்தாண்டன், புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்ற வேலூர் க.பன்னீர்செல்வம் தி.மு.க. வேலூர் மாவட்ட மருத்துவர் அணித் தலைவர் மரு. தி.ச. முகமது சயி ஆகியோர் உரையாற்றினர். "பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்" 2009 பதிப்பு 20 தொகுதிகள் உருவாக்கத்திற்கு சீரிய பங்களிப்பு நல்கியவரான பேராசிரியர் சோம. இராசேந்திரன் உரைக்குப் பின் மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளரும் புதிய சிந்தனையாளன் ஆசிரியருமான வாலாசா வல்லவன் உரையாற்றினார். மா.பெ.பொ.க. வேலூர் மாநகரச் செயலாளர் மீ. டில்லிபாபு நன்றியுரையுடன் பகல் 1.30 மணிக்குப் பொது அரங்கம் நிறைவடைந்தது.




பிற்பகல் நிகழ்வின் தொடக்கமாக மக்கள் தமிழகம் கட்சித் தோழர் விசுவநாதன் நெறிப்படுத்தலில் 'மாற்றம் கலையக' மாணவர்கள் நடனமாடினர். காஞ்சிக் கலைக் குழுவின் காஞ்சி உலக ஒளி கொள்கைப் பாடல்கள் பாடினார்.

பிற்பகல் 2.45 மணிக்கு 'உண்மையான கூட்டாட்சி' தலைப்பில் கருத்தரங்கம் மா.பெ.பொ.க. தலைமைக் குழு உறுப்பினர் சா. குப்பன் தலைமையில் தொடங்கியது. புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் வேலூர் கோ. சத்தியநாராயணன் வரவேற்புரையையும் சா.குப்பன் தலைமையுரையையும் ஆற்றினர். அடுத்து வேலூர் பேராசிரியர் இர. நடராசன், புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் வேலூர் மா.தசரதன், மா.பெ.பொ.க. திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் நா. மதனகவி, மக்கள் தமிழகம் கட்சிப் பொதுச் செயலாளர் நா. செவ்வேள், தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் செயலாளர் காஞ்சி அமுதன் ஆகியோர் கருத்துரையாற்றினர். கருத்தரங்கின் நிறைவாக தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. இராசிவ் காந்தி சிறப்பான உரையாற்றினார்.

விழாவின் நிறைவுப் பகுதியாக 'மார்க்சியப் பெரியாரியம்' பொருள் பற்றிய கருத்தரங்கத்திற்கு மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் தி.துரைசித்தார்த்தன் தலைமை உரையாற்றினார். மா.பெ.பொ.க. தலைமைக் குழு உறுப்பினர் க.முகிலன், ம.க.இ.க. மாநிலச் செயலாளர் கோவன், மா.பெ.பொ.க. காஞ்சி மாவட்டச் செயலாளர் சி. நடராசன், புரட்சிகர இளைஞர் முன்னணியைச் சேர்ந்த கரிகாலன் ஆகியோர் கருத்துரையாற்றினர். இக்கருத்தரங்கின் நிறைவாக தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளரும் சிறந்த மார்க்சிய அறிஞரும் செயற்பாட்டாளருமான தியாகு செறிவான கருத்துப் பொழிவாற்றினார்.

மா.பெ.பொ.க. வேலூர் மாவட்டத் துணைச் செயலாளர் லோ. இரத்தினகுமாரின் நன்றியுரையுடன் இரவு 7 மணிக்கு விழா நிறைவுற்றது. விழா தொடக்கம் முதல் நிறைவு வரை அவை நிறைந்திருக்கச் செய்த வெளியூர், உள்ளூர் தோழர்கள், தோழமை அமைப்புத் தோழர்கள் மற்றும் விழாவில் பங்கேற்று கருத்துரையாற்றிய பெருமக்கள் அனைவருக்கும் நன்றி உரித்து.

அறிஞர் வே.ஆனைமுத்து அவர்கள் எழுபது ஆண்டுகள் தம் அயராத உழைப்பைச் செலுத்தி விதைத்த, செழுமைச் சேர்த்த, செயல்படுத்திய கொள்கைகளின் தொடர் வெற்றிக்குப் பாடாற்ற உறுதி பூணுவோம்!

**அறிஞர் வே. ஆனைமுத்து புகழ் ஓங்குக!**

## உணவுக் கழக மண்டல அலுவலகத்தில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பிறந்த நாள் விழா



இந்திய அரசின் உணவுக் கழகத்தின் சென்னை மண்டல அலுவலகத்தில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் 134ஆவது பிறந்த நாள் விழா 8.5.2025 அன்று மாலை 4 மணிக்கு கொண்டாடப்பட்டது. மேலாளர் வி. மோத்தி வரவேற்புரையாற்றினார். பொது மேலாளர் பி. முத்துராமன் தலைமைத் தாங்கினார். வாலாசா வல்லவன் சிறப்புரையாற்றினார். மேலாளர் எஸ்.சாந்தி நன்றியுரை யாற்றினார். உணவுக் கழகத்தின் ஊழியர்களும் அலுவலர்களும் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர். விழா தொடங்கும் முன்பு வளாகத்தில் உள்ள அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு வாலாசா வல்லவன் மாலை அணிவித்து சிறப்பு செய்தார்.

செய்தி : **முத்தையா,** இந்திய உணவுக் கழகம்

## விடுதலைப் பேரொளி



இத்தனைத் தலைவர் தம்முள்
ஈரோட்டுப் பெரியா ரேதான்
முத்திரைத் தலைவர்; நம்மின்
முன்னோடித் தலைவர்; அன்னார்
சொத்துக்குக் காவல் இங்கே
தூங்காமல் பலபேர்; ஆனை
முத்துவோ அய்யா கொள்கை
முழுமைக்கும் காவல் ஆனார்

வரலாற்றில் புத்த ருக்கு
வாய்த்திட்ட தொண்டர் போலப்
பெரியார்க்குச் சரியாய் வாய்த்த
பெருந்தொண்டர் ஆனை முத்து
சரியான முறையில் அய்யா
தத்துவம் தனைஉள் வாங்கி
விரிவாக்கிச் செழுமை யான
வீச்சோடு வழங்கும் வீரர்

தொண்டில்நம் நெஞ்சில் நிற்கும்
தூயவர் ஆனை முத்து
மண்டலால் பிற்பட் டோர்க்கு
மய்யப்பணி வாய்ப்பைத் தேடிக்
கண்டவர்; காற்றைப் போலக்
கடனாற்றும் இயல்பைத் தாமாய்க்
கொண்டவர்; வள்ளு வன்தன்
குறள்போலத் தெளிந்த சொல்லர்

ஊனுடல் உழைப்பு மற்றும்
ஓயாத படிப்பு யாவும்
மானுட விடுத லைக்கு
மாண்புகள் சேர்க்க என்றே
ஆனமட் டுக்கும் வாழும்
அருந்தோழர் ஆனை முத்து
காணுநம் தமிழர்க் குள்ளே
கதிர்போன்றோர்; கார்போல் வாழ்க!

**- கவிஞர் தமிழேந்தி**

# வேலூரில் 20.04.2025 அன்று நடந்த அறிஞர் வே. ஆனைமுத்து நூற்றாண்டு விழா படங்கள்



தொடக்கவுரையாற்றிய தமிழியக்கத் தலைவர்
முனைவர் கோ. விசுவநாதனுக்கு நூல் பரிசளிக்கப்படுகிறது.




பொது அரங்கத்தில் வி.சி.க. வேலூர் மா.செ. பிலிப் உரை



புலவர் செந்தலை ந. கவுதமனுக்கு க. குப்புசாமி நூல் பரிசளிக்கிறார்




திராவிடர் கழக மாவட்டக் காப்பாளர் வி. சடகோபன் உரை



ச.ந.ச. மார்த்தாண்டனுக்கு மீ. டில்லிபாபு நூல் பரிசளிக்கிறார்




வேலூர் க. பன்னீர்செல்வம் உரை



புலவர் ந. கவுதமன் நூல்கள் விற்குமிடத்தில்
மீ. டில்லிபாபு, அவர் மகள் எழிலரசியுடன்




பொது அரங்கத்தில் தி.மு.க. மருத்துவர் அணி மரு. தி.ச. முகமது சயி




பேரா. சோம. இராசேந்திரனுக்கு
லோ. இரத்தினகுமார் நூல் பரிசளிக்கிறார்




அரியலூர் தமிழ் இளவரசன் உரை




காஞ்சிபுரம் தீ. கோபாலகிருட்டிணன் உரை




முற்பகல் நிகழ்வில் மீ. டில்லிபாபு நன்றியுரை




பிற்பகல் தொடக்கத்தில் பாராஞ்சி மாற்றம் கலையக மாணவர்கள் நடனம்




காஞ்சி கலைக்குழு உலக ஒளி கொள்கைப் பாடல் பாடுகிறார்




வேலூர் கோ. சத்தியநாராயணன் பிற்பகல் நிகழ்வில் வரவேற்புரை




கருத்தரங்கத்தில் நா. செவ்வேள் உரை




கருத்தரங்கில் பேரா. இர. நடராசன் உரை




காஞ்சி அமுதன் உரை




ம.க.இ.க. கோவன் உரை




கருத்தரங்கத்தில் மா. தசரதன் உரை




நா. மதனகவி உரை



தோழர் தியாகுவுக்கு நா. வேலு நூல் பரிசளிக்கிறார்




புரட்சிகர இளைஞர் முன்னணி கரிகாலன் உரை




நிகழ்வின் நிறைவில் லோ. இரத்தினகுமார் நன்றியுரை

# மே 5 காரல்மார்க்சு பிறந்தநாள்

# மார்க்சை அறிவோம்! மார்க்சியம் கற்போம்!!



**க. முகிலன்**

காரல் மார்க்சு 1818ஆம் ஆண்டு மே 5ஆம் நாள் செருமனி (பிரஷ்யா) நாட்டில் டிரியர் எனும் சிறிய நகரத்தில் பிறந்தார்.

காரல் மார்க்சு தன் பள்ளிப்படிப்பின் இறுதித் தேர்வில், எதிர்காலப் பணியைத் தேர்வு செய்வது குறித்து ஒரு இளைஞனின் சிந்தனைகள் எனும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் "மனித குலத்தின் பெருமைக்காகப் பாடுபடக்கூடிய ஒரு வேலையைத் தீர்மானித்துக் கொண்டால், எவ்வளவு சுமைகளும் நம்மை வளைத்துவிடாது. ஏனெனில் அவை யெல்லாம் அனைவருக்குமான தியாகங்கள். நமக்குக் கிடைக்கப் போகிற மகிழ்ச்சியோ எல்லையற்றது; கஞ்சத்தனமில்லாதது; அகங்கார மற்றது. நமது மகிழ்ச்சி கோடானுகோடி மக்களுக்குச் சொந்தமானது. நமது சாதனைகள் நீடித்து நிற்கும்; என்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கும். உன்னதமான மனிதர்கள் வடிக்கும் கண்ணீரால் நமது சாம்பல் கழுவப்படும்" என்று எழுதினார். ஆழ்ந்த கருத்துகளைக் கவிதை நடையில் எழுதும் ஆற்றல் காரல் மார்க்சுக்குப் பள்ளிப் பருவத்திலேயே அமைந்து விட்டது.

மார்க்சு எழுதிய இக்கட்டுரையும் மற்றும் ஆறு கட்டுரை களும் இன்றும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

டெமாக்ரிடஸ் மற்றும் எபிகூரசு ஆகியோரின் இயற்கை பற்றிய தத்துவத்தில் வேறுபாடு எனும் தலைப்பில், மார்க்சு தன் முனைவர் பட்டத்துக்கான ஆய்வுக் கட்டுரையை எழுதினார். டெமாக்ரிடஸ், எபிகூரசு இருவருமே நாத்திகர்கள். ஆயினும் டெமாக்ரிடசைவிட எபிகூரசின் ஆய்வும், தத்துவமும் உயர்ந்தவை என்பது மார்க்சின் மதிப்பீடாகும். இக்கட்டுரையில் எபிகூரசை, கீழ்க்குறித்துள்ள லுக்ரிடசின் புகழ் மொழிகளை மேற்கோள் காட்டி மார்க்சு பாராட்டியுள்ளார். "பிணம் போல் கனத்த மதத்தின் சுமை தாங்காமல் மனிதக் கண்ணுக்கும் புலப்படாதபடி மனித வாழ்வு முட்டிபோட்டு ஊர்ந்தது. முரண்டு பிடித்த தனது ஊனக் கண்களைக் கிரேக்கத்தின் ஒரு மனிதன் உயர்த்தினான். முதலில் முதுகெலும்பை நிமிர்த்தினான். துணிவோடு எதிர்கொண்டான். கடவுள்கள் பற்றிய கதைகள் அவனை நொறுக்கவில்லை. வானத்தின் மின்னல் ஒளியும் இடியும் அவனை அசைக்கவில்லை. அவனது காலடியில் மதம் வீழ்ந்து நசுங்கியது. அவனது வெற்றியால் நாமெல்லாம் வானமளவுக்கு உயர்ந்தோம்".

1841 ஏப்பிரல் 15 அன்று ஜெனா பல்கலைக் கழகம் காரல் மார்க்சுக்கு முனைவர் பட்டம் வழங்கியது. அப்போது மார்க்சுக்கு அகவை 23. ரைன்லாந்து பகுதியின் தலைநகரான கொலோனில் 1842இல் ரைனிஷி ஷெய்டுங் என்ற நாளேடு தொடங் கப்பட்டது. 1842 மே மாதம் அதில் பத்திரிகைச் சுதந்தரம் பற்றி மார்க்சு நீண்ட கட்டுரை எழுதினார். அக்கட்டுரையில், "வாழ்வதற்கும் எழுதுவதற்கும் மனிதன் சம்பாதிக்க வேண்டும் என்பது உண்மையே. ஆனால் சம்பாதிப்பதற்காகவே அவன் வாழவோ, எழுதவோ கூடாது. எழுத்தாளனுக்கு அவனது எழுத்து ஒரு கருவி அல்ல. அது தன்னளவிலே முடிந்த ஒரு இலக்கு. தேவைப்பட்டால், எழுத்து உயிர்த்திருப்பதற்காகத் தனது உயிரையும் தியாகம் செய்வான்" என்று எழுதினார். அதன்படியே தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தார்.

1842இல் அந்நாளேட்டின் ஆசிரியரானார். பிரடெரிக் எங்கெல்சு இங்கிலாந்தில் இந்நாளேட்டின் நிருபராக இருந்து செய்திகளையும் கட்டுரைகளையும் அனுப்பி வந்தார். மார்க்சும், எங்கெல்சும் நேரில் சந்திப்பதற்கு முன்பே, இந்த நாளேட்டின் மூலம் இருவரும் அறிமுகமாகியிருந்தனர். 'ரைனிஷி ஷெய்டுங்' நாளேட்டிற்கு நான்கு மாதங்களே மார்க்சு ஆசிரியராக இருந்தார். அரசின் செயல்பாடுகளைக் கடுமையாகத் திறனாய்வு செய்ததால், அரசு அந்நாளேட்டை வெளியிடுவதற்குத் தடை விதித்துவிட்டது.

1843 சூன் 19 அன்று காரல்மார்க்சும் ஜென்னியும் திருமணம் செய்து கொண்டனர். ஏழு ஆண்டுகளுக்கு மேலான இவர்களின் காதல் திருமணத்தில் முடிந்தது. அப்போது மார்க்சின் அகவை 25. ஜென்னியின் அகவை 29. பிரஷ்யாவில் (செருமனி) இருந்து கொண்டு பத்திரிகை நடத்த முடியாது என்பதால், பாரிசு நகரிலிருந்து அர்னால்டு ரூகே என்பவருடன் இணைந்து புதிய பத்திரிகை நடத்துவதற்காக, மார்க்சும் ஜென்னியும் 1843 அக்டோபரில் பாரிசில் குடியேறினர். 1844 சனவரியில் ஜெர்மன்-பிரெஞ்சு வருடாந்திர ஏடு என்ற பெயரில் இரட்டை இதழாக வெளிவந்தது. இதன் ஆசிரியர்கள் அர்னால்டு ரூகே - காரல் மார்க்சு என அட்டையில் குறிக்கப்பட்டிருந்தது. இம்முதல் இதழே இறுதி இதழாகவும் அமைந்துவிட்டது. பிரஷ்ய அரசு (ஜெர்மன்) தனது நாட்டுக்குள் இப்பத்திரிகை நுழையத் தடை விதித்தது. மேலும் மார்க்சு தன் சொந்த நாடான பிரஷ்யாவுக்குள் நுழைந்தால் கைது செய்ய ஆணை பிறப் பித்தது. ஜெர்மன்-பிரெஞ்சு வருடாந்திர ஏடு இதழில் மார்க்சு, ஹெகலின் உரிமையின் தத்துவம் பற்றிய விமர்சனத்திற்குப் பங்களிப்பு: ஓர் அறிமுகம் என்ற கட்டுரையை எழுதியிருந்தார். 13 பக்கங்கள் கொண்ட அக்கட்டுரையில் தான் மார்க்சின் புகழ்பெற்ற - மதம் மக்களுக்கு அபின் எனும் சொற்கோவை இடம்பெற்றுள்ளது. அதன் முழுமையான பத்தி கீழே தரப் பட்டுள்ளது.


"மதத்திற்கு எதிரானப் போராட்டம் என்பது அந்த மதம் எனும் ஆன்மீக வாசனையைக் கொண்டுள்ள உலகத்திற்கு எதிரான மறைமுகப் போராட்டமே! மத ரீதியான துன்பம் என்பது உண்மையான துன்பத்தின் வெளிப்பாடே - உண்மையான

துன்பத்துக்கு எதிரான கண்டனமே. மதம் என்பது; ஒடுக்கப்பட்ட சீவனின் பெருமூச்சு; இதயமற்ற உலகின் இதயம்; ஆன்மநேய மற்ற சூழல்களின் ஆன்மநேயம். அது மக்களுக்கு அபின். மக்களின் கற்பிதமான இன்பம் என்கிற மதத்தை ஒழிக்க உண்மையான இன்பத்தைக் கொண்டுவர வேண்டியுள்ளது. நடப்புச் சூழல்கள் பற்றிய மாயைகளைக் கைவிடச் செய்ய, அந்த மாயைகளைத் தாங்கி நிற்கும் சூழல்களைக் கைவிடச் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே மதம் மீதான விமர்சனம் என்பது மதம் எனும் ஒளி வட்டத்தைக் கொண்ட கண்ணீர் வாழ்வு பற்றிய முதல் விமர்சனமாகும்''.

மதம் நீடித்திருப்பதற்கான அடிப்படைச் சூழலை மாற்றாமல் மதத்தை ஒழிக்க முடியாது என்கிற இம் மாபெரும் கருத்தை, மார்க்சு தன் 26ஆம் அகவையில் கண்டறிந்தார் என்பது பெருவியப்புக்குரியதாகும். மேலும், இதே கட்டுரையில் மார்க்சின் மற்றொரு புகழ்பெற்ற மேற்கோளும் இடம் பெற்றுள்ளது: ஒரு பௌதிக சக்தியானது இன்னொரு பௌதிக சக்தியாலேயே தூக்கி எறியப்படும். ஆனால் சித்தாந்தமும் கூட ஒரு பௌதிகச் சக்தியாக மாறும் - எப்போது எனில், அது மக்கள் திரளைக் கவ்விப் பிடிக்கும் போது. தத்துவத்துக்கும் நடைமுறைக்கும் இடையிலான தொடர்பையும், தத்துவம் மனிதர்களின் வழியாக மாபெரும் பௌதிகச் சக்தியாக மாறும் என்கிற பேருண்மையையும் மார்க்சு இதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மார்க்சைவிட 14 ஆண்டுகள் மூத்தவரான பாயர் பாக் என்பவர், 1841இல் கிறித்துவத்தின் சாரம் என்கிற நூலை வெளியிட்டார். பொருள் முதல்வாத அடிப்படையில் பாயர்பாக் அந்நூலில் மதத்தை விமர்சனம் செய்திருந்தார். இந்நூலை மார்க்சு வரவேற்றார். ஆயினும் பாயர்பாக் தர்க்க அடிப்படையில்-சிந்தனை அடிப்படையில் மட்டுமே மதத்தை விமர்சனம் செய்திருப்பதை மார்க்சு உணர்ந்தார். பாயர்பாக்கின் தத்துவம் நடைமுறையிலிருந்து விலகி கற்பனை உலகில் நிற்பதால் பயன்படாது என்று எண்ணினார். 1844இல் பாரிசில் இருந்தபோது பாயர் பாக்கின் நூல் பற்றிய தன் கருத்துகளைக் குறிப்பேட்டில் இரத்தினச் சுருக்கமாய் எழுதினார். இதுவே பாயர்பாக் பற்றிய சூத்திரங்கள் எனப்படுகிறது. இதன் 1ஆம் சூத்திரத்தில் ''தத்துவ ஞானிகள் பல வகையிலும் உலகை விளக்கி இருக்கிறார்கள். நாம் செய்ய வேண்டியது என்னவோ அதை மாற்றுவதுதான்'' என்று எழுதி இருந்தார். இக்குறிப் பேட்டை மார்க்சு இறந்தபிறகே எங்கெல்சு கண்டெடுத்தார்; 1888இல் இதை நூலாக வெளியிட்டார். மார்க்சின் கல்லறையில் இந்தச் சொற்றொடர் மட்டும் பொறிக்கப்பட்டுள்ளது.

பிரஷ்ய அரசின் நெருக்குதல் காரணமாக 1845ஆம் ஆண்டு மார்க்சு குடும்பம் பாரிசிலிருந்து வெளியேற வேண்டும் என்று பிரான்சு அரசு ஆணையிட்டது. அதனால் மார்க்சு குடும்பம் பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸ்ஸெல்ஸ் நகரில் குடியேறியது. நடப்பு அரசியல் பற்றி மார்க்சு எழுத்து வடிவில் ஏதும் வெளியிடக் கூடாது என்கிற நிபந்தனையின் பேரில்தான் அந்நாட்டில் அவர் தங்க அனுமதிக்கப்பட்டார்.



இவ்வுலகம் கடவுளால் படைக்கப்பட்டது. கடவுளால் படைக்கப்பட்ட பொருள்களும் உயிரினங்களும் அவை தோன்றிய காலம் முதலாக மாறாமல் நிலைபெற்று இருக்கின்றன என்று மத வாதிகளும் கருத்து முதல் வாதிகளும் கூறிவந்தனர். இதை மறுத்து செருமானிய தத்துவ அறிஞரான ஹெகல் (1770-1830) இவ்வுலகிலும் -இப்பேரண்டத்திலும் உள்ள எல்லாப் பொருள்களும் இயங்கிக் கொண்டும் மாறிக்கொண்டும் இருக்கின்றன. பொருள்களின் இயக்கத்திற்கு அப்பொருள் களுக்குள் பொதிந்துள்ள எதிரெதிர் ஆற்றல்களே - முரண்பாடே காரணம். உலகில் எந்தவொரு பொருளும் தனித்து இருப்ப தில்லை. எல்லாப் பொருள்களும் ஒன்றையொன்று சார்ந்து நின்று இயங்குகின்றன என்று அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்து அறிவித்தார். இந்தக் கோட்பாடுதான் இயக்கவியல் எனப் படுகிறது. இதுவே மார்க்சியத்தின் அடிப்படையாகும். எனவேதான் ஹெகல் இயக்கவியலின் தந்தை எனப்படுகிறார்.

ஹெகலின் கோட்பாட்டை மார்க்சு, எங்கெல்சு உள்ளிட்ட எண்ணற்ற இளைஞர்கள் தீவிரமாக ஆதரித்தனர். இவர்கள் இளம் ஹெகலியர் என அழைக்கப்பட்டனர். ஆனால் மார்க்சின் ஆய்வுநோக்கு விரிவடைந்த பின், உயர்ந்த படைப்புகளை உருவாக்குவதற்கு அடிப்படையாக இருப்பது மனிதனின் சிந்தனையே என்கிற ஹெகலின் முடிவை மார்க்சு எதிர்த்தார். ஹெகல் இயக்கவியலைத் தலைகீழாக நிறுத்தியுள்ளார். அதை நேராக மாற்றுவதே நம் வேலை என்று மார்க்சு கூறினார்.

ஆனால் மற்ற இளம் ஹெகலியர்கள், ஹெகல் கூறியுள்ளதே சரி என்று கூறி, ஹெகலைத் தலைமேல் வைத்துக் கொண்டாடினர். எனவே இளம் ஹெகலியரின் தத்துவ நிலைபாடுகளுக்கு எதிராக 1845 நவம்பரில் மார்க்சும் எங்கெல்சும் இணைந்து, ஜெர்மானிய சித்தாந்தம் என்ற நூலை எழுதினர். ஆனால் எங்கெல்சின் இறப்புக்குப் பின்னரே, இந் நூலின் சில பகுதிகள் வெளிவந்தன. முழுமையான வடிவில் நூலாக 1930களில் சோவியத் கம்யூனிஸ்டு கட்சியால் வெளியிடப்பட்டது. இந்த நூலில்தான் மார்க்சியத்தின் பிழிவான வரிகளாகத் திகழும் உணர்வு வாழ்நிலையைத் தீர்மானிப்பதில்லை; வாழ்நிலைதான் உணர்வைத் தீர்மானிக்கிறது எனும் வரிகள் இடம் பெற்றுள்ளன.

இந்திய சமூகத்தில் இந்திய மார்க்சியர்களும், மற்றவர்களும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே கூறப்பட்டிருப்பது போன்ற - நூற்பா (சூத்திரம்) போன்ற - ஒரு கருத்தை மார்க்சும் எங்கெல்சும், செருமானிய தத்துவம் நூலில் எழுதியுள்ளனர்:

''ஆளும் வர்க்கத்தின் சிந்தனைகளே ஒரு யுகத்தை ஆளும் சிந்தனைகளாக உள்ளன. ஆளும் வர்க்கம் என்றால் அது சமுதாயத்தின் பொருளியல் சக்தியை மட்டுமல்லாது அறிவுச் சக்தியையும் ஆளுகிறது. பொருள் உற்பத்திக்கான காரணங்களைத் தன் கட்டுக்குள் வைத்திருக்கிற வர்க்கமானது, அதன் காரணமாகவே அறிவு உற்பத்திக்கான காரணங் களையும் தன் கட்டுக்குள் வைத்திருக்கிறது. இந்தச் சாதனங் களைக் கொண்டிராதவர்களின் சிந்தனைகள் இதற்குப் பொதுவாகவே அடங்கிப் போய்விடுகின்றன''.

இந்தியாவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அறிவுச் சக்தியை ஆளும் வர்க்கமாகப் பார்ப்பனர்களே இருந்து வந்துள்ளனர். வருணாசிரம-சாதிய அமைப்பின் காரணமாகப் பார்ப்பனர்கள் சமூகத்திலும் மதம் தொடர்பானவற்றிலும் பெற்றிருந்த ஏகபோக உரிமையால் சமூகத்திற்கான கருத்துரு வாக்கம் செய்யும் மூலகர்த்தாக்களாக விளங்கினர். உற்பத்திச் சக்திகளிலும் உற்பத்தி உறவுகளிலும் வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்களால் பார்ப்பனர்களின் ஏகபோக உரிமைகளில் பிறப்பால் அறிவிலும் தகுதியிலும் உயர்ந்தவர் என்ற நிலைமையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்படவில்லை. முதலாளிய உற்பத்தி முறை மேலோங்கிய பிறகும், இதே நிலை தான் நீடிக்கிறது.

ஏனெனில் உற்பத்திச் சக்திகளிலும் உற்பத்தி உறவுகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்ற அதே வேகத்தில், அச்சமூகத்தின் சித்தாந்தத்தில் மாற்றங்கள் நிகழ்வதில்லை. இதற்கெனத் தனியாக, தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டாலன்றி, பழைய சமூகத்தின் சித்தாந்த ஆதிக்கமே தொடர்ந்து நீடிக்கும். ''இந்தியாவில் பாரசிகர், ஹுணர், குஷானர், துருக்கியர், ஆங்கிலேயர் முதலான அயல்நாட்டவர்களின் படையெடுப்பும், ஆட்சிகளும் ஏற்பட்ட பிறகும், இந்தியாவில் பார்ப்பனியச் சித்தாந்தமே சமூகத்தை ஆட்டிப் படைக்கிறது. உற்பத்தி உறவுகளில் ஏற்பட்ட மாற்றத்தின் வேகத்திற்கு ஈடான வகையில் சமூகச் சிந்தனையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்ற குறிக் கோளுடன் சீனாவில் 1965இல் மாசேதுங் கலாச்சாரப் புரட்சியை நடைமுறைப்படுத்தினார்.

செய்தி ஏடுகள், தொலைக்காட்சி, கணினி போன்ற நவீன ஊடகங்கள் வாயிலாக ஆளும்வர்க்கம் தன் இருத்தலுக்கான நியாயத்தை மக்கள் நெஞ்சங்களில் பதியச்செய்து வருகிறது. இந்தியா அரை நிலப்பிரபுத்துவ-அரை முதலாளித்துவ நாடாக இருப்பதால், பார்ப்பனர்கள் ஊடகங்கள் வாயிலாகத் தங்கள் கருத்தியலை, சாதி அமைப்பை, தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருகின்றனர். 1847இல் புருதோன் என்பவர் வறுமையின் தத்துவம் என்ற நூலை எழுதினார். முதலாளித்துவம் பற்றிய பொருளாதார விதிகள் என்பவை நிலையானவை; மாற்ற முடியாதவை என்று புருதோன் அந்நூலில் அறுதியிட்டுக் கூறியிருந்தார். அந்நூலின் கருத்தை மறுத்து, மார்க்சு, தத்துவத்தின் வறுமை என்ற நூலைப் பிரெஞ்சு மொழியில் எழுதினார். ஏனெனில் புருதோன் அவருடைய நூலைப் பிரெஞ்சு மொழியில் எழுதியிருந்தார்.

பொருளாதார விதிகள் என்பவை வரலாற்று ரீதியாக உருவானவை. மனிதனின் தேவைகளின் பொருட்டே புதிய கண்டுபிடிப்புகளும் உற்பத்திச் சாதனங்களும் தோன்றி வருகின்றன. இந்த வளர்ச்சியின் நிகழ்வுப் போக்கின் ஊடாகச் சமுதாயம் மாறுகிறது. உற்பத்திச் சக்திகளையும் உற்பத்தி உறவுகளையும் அடிக்கட்டுமானமாகக் கொண்டுள்ள சமுதாயத்தில், அவற்றுக்கு ஏற்ப, மேல்கட்டுமானமாக உள்ள அரசியல், சட்டம், தத்துவங்கள் முதலானவற்றில் மாறுதல்கள் ஏற்படுகின்றன என்று மார்க்சு பதில் அளித்தார்.

இலண்டனில் இருந்த நீதியாளர் கழகம் என்பது 1847 முதல் கம்யூனிஸ்டுக் கழகம் என்ற பெயரில் இயங்கியது. கம்யூனிஸ்டுக் கழகத்தின் வேண்டுகோளை ஏற்று மார்க்சும் எங்கெல்சும் இதில் இணைந்தனர். புதிய பெயருக்கு ஏற்ற தன்மையில் கட்சியின் கோட்பாடுகளை வகுக்கும் பொறுப்பு மார்க்சு, எங்கெல்சு இருவரிடமும் ஒப்படைக்கப்பட்டது. இவர்கள் உருவாக்கிய 23 பக்க அறிக்கை கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை என்ற பெயரில் 1848 பிப்பிரவரியில் இலண்டனில் வெளியிடப்பட்டது. உலகையே உலுக்கிய இந்த அறிக்கையை எழுதிய போது மார்க்சின் அகவை 30; எங்கெல்சுக்கு 28 அகவை. இதுநாள் வரையிலுமான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங் களின் வரலாறேயாகும் எனும் வரியுடன் தொடங்கும் கம்யூனிஸ்டு அறிக்கையில், நிலவுடைமை உற்பத்தி முறையிலிருந்து முதலாளிய உற்பத்தி முறைக்கு மாறியுள்ளதால், சமூகத்தில் உற்பத்தி உறவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், முதலாளித்து வத்தின் இயக்கப் போக்கு மற்றும் அதன் சுரண்டல் வடிவங்கள் குறித்து நெஞ்சைக் கனலாக்கும் நடையில் எழுதப்பட்டுள்ளது.

''அஞ்சி நடுங்கட்டும் ஆளும் வர்க்கங்கள் - கம்யூனிசப் புரட்சி வருகிறதென்று; பாட்டாளிகள் இழப்பதற்கு ஏதுமில்லை - தங்கள் அடிமைச் சங்கிலிகளைத் தவிர! ஆனால் அவர்கள் வெல்வதற்கோ அனைத்து உலகும் இருக்கிறது''.

எனவே உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்ற அறைகூவலுடன் முடியும் கம்யூனிஸ்டு அறிக்கை உலகம் முழுவதும் உழைக்கும் மக்களிடையே புரட்சிக் கனலை மூட்டியது. முதலாளிகளிடையே பெரும் அச்சத்தை ஊட்டியது. கம்யூனிஸ்டு அறிக்கையில், தான் புதியதாகக் கூறியுள்ள கோட்பாடு குறித்து மார்க்சு வெய்டெமை யருக்கு 1852 மார்ச்சு 3ஆம் நாள் எழுதிய மடலில் அவருக்கே உரிய அறிவு நாணயத்துடன் எழுதியுள்ளார்.

''என்னைப் பொறுத்தவரை நவீன சமுதாயத்தில் வர்க்கங்கள் இருக்கின்றன என்பதையோ, அவற்றிற்கு இடையே போராட்டம் நடக்கிறது என்பதையோ கண்டுபிடித்த பெருமை என்னைச் சேராது. எனக்கு வெகுகாலத்திற்கு முன்னரே இந்த வர்க்கப் போராட்டத்தின் வரலாற்று வளர்ச்சியை முதலாளித்துவ வரலாற்றாளர்கள் விரிவாகக் கூறியிருக்கிறார்கள். அதேபோன்று இந்த வர்க்கங்களின் பொருளாதார உள்கட்டமைப்பை முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள் விவரித்து விட்டார்கள். நான் செய்துள்ள புதிய பங்களிப்பு 1. இந்த வர்க்கங்களின் இருப்பு

என்பது உற்பத்தி வளர்ச்சியின் குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதாகும். 2. வர்க்கப் போராட்டமானது அவசியமான வகையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்கிறது. 3. அந்தச் சர்வாதிகாரமும் அனைத்து வர்க்கங்களையும் ஒழித்த, ஒரு வர்க்கமற்ற சமுதாயத்திற்கான இடைக்கால ஏற்பாடாகவே இருக்கும்''.

கம்யூனிஸ்டு அறிக்கையை செருமனி, பிரெஞ்சு, ஆங்கிலம், இத்தாலி, பிளமிஷ், டேனிஷ் ஆகிய ஆறு மொழிகளில் ஒரே சமயத்தில் வெளியிடத் திட்டமிட்டனர். 1848 பிப்பிரவரியில் செருமன் மொழியில் மட்டுமே வெளியிடப்பட்டது. நாற்பது ஆண்டுகள் கழித்து - மார்க்சு மறைந்த பிறகு, 1888இல் தான் ஆங்கில மொழியில் வெளிவந்தது. சமதர்ம அறிக்கை என்ற பெயரில் பெரியார் 1931இல் குடிஅரசு ஏட்டில் கம்யூனிஸ்டு அறிக்கையை வெளியிட்டார். அய்ந்து வாரங்கள் ஒரு தொடராக அது வெளிவந்தது. முதலாளிகளும் பட்டாளிகளும் எனும் முதல் அத்தியாயம் மட்டுமே வெளியானது. ப.ஜீவானந்தம் இதை மொழிபெயர்த்தார்.

கம்யூனிஸ்டு அறிக்கையை குடிஅரசில் வெளியிட்ட போது பெரியார் எழுதிய அறிமுக உரையில், ''உலகில் சமதர்ம உணர்ச்சிக்கு விரோதமான தன்மையில் எல்லா நாடுகளிலும் பணக்காரன்-ஏழை, முதலாளி-தொழிலாளி என்கிற வேற்றுமை மட்டுமே இருக்கின்றன. ஆனால் இந்தியாவிலோ இவற்றுடன் கூட உயர்ந்த சாதி-தாழ்ந்த சாதி என்கிற ஏற்றத்தாழ்வு முதன்மையானதாகவும், இந்தத் தத்துவத்துக்குக் கோட்டை யாகவும் இருந்து வருகிறது'' என்று எழுதினார்.

சமதர்மம் வருவதற்கு-வர்க்க ஓர்மை ஏற்படுவதற்குத் தடையாக உள்ள வருணாசிரம-சாதி அமைப்பைத் தகர்க்க வேண்டியது முதன்மையான வேலை என்று பெரியார் தன் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்தார்.

1849 ஆகஸ்டு மாதம் மார்க்சு இலண்டனில் குடியேறினார். அதன்பின், இறுதி வரை இலண்டனிலேயே வாழ்ந்தார். 1851 முதல் இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் மியூசியம் நூலகத்தில் தொடர்ந்து பல ஆண்டுகள் படித்தார். 1853இல் அமெரிக்காவின் நியூயார்க் டெய்லி ட்ரிபியூன் ஏட்டிற்கு மார்க்சு இந்தியாவைப் பற்றி 11 கட்டுரைகள் எழுதினார். இலண்டனில் படித்தவற்றின் அடிப்படையில் இந்தியாவின் நிலையை மார்க்சு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இதோ, ஓர் எடுத்துக்காட்டு: ''இந்துஸ்தானத்தில் கொலையே ஒரு தெய்வச் சடங்காயிற்று. இதை நாம் மறக்கக் கூடாது. இந்தச் சிறு சமூகங்கள் சாதி வேறுபாடுகளாலும் அடிமை முறையாலும் களங்கமடைந் திருந்தன. மனிதனைச் சூழ்நிலைக்கு எசமானன் ஆக்குவதற்குப் பதிலாக, அவனை அதற்கு அடிமைப்படுத்தின. சமூக நிலையை ஒருபொழுதும் மாறாத இயற்கை விதியாகச் செய்தன. இயற்கையையே மனிதன் கும்பிட்டு வணங்கும் மிருகத்தன மான நிலைமை ஏற்படுத்தப்பட்டது. இயற்கையின் எசமான னாகிய மனிதன் குரங்காகிய அனுமன் முன்பும் பசுமாட்டின் முன்பும் தெண்டனிட்டு வணங்கியதில் இந்தச் சிறுமை காட்சியளித்தது. இவற்றை நாம் மறக்கக் கூடாது''.

1857 மற்றும் 1858இல் நியூயார்க் டெய்லி ட்ரிபியூன் ஏட்டிற்கு சிப்பாய்க் கலகத்தை மய்யப்படுத்தி மார்க்சு 18 கட்டுரைகளும், எங்கெல்சு 10 கட்டுரைகளும் எழுதினர். மார்க்சு எழுதிய முதல் கட்டுரையில், ரோமாபுரியின் பிரித்தாளும் கொள்கை எனும் சக்திவாய்ந்த ஆயுதத்தைக் கடைப்பிடித்தே பிரிட்டன் ஏறக்குறைய 150 ஆண்டுகாலமாக இந்திய சாம்ராச்சியத்தைத் தந்திரமாகத் தனது பிடியில் வைத்திருக்கிறது. பகைமைகள் நிறைந்த பல்வேறு இனங்கள், குலங்கள், சாதிகள், சமயங்கள், அரசுகள் ஆகியவற்றை ஒன்று சேர்த்து உருவாக்கப்பட்டிருக்கின்ற பூகோள ஒற்றுமையைத் தான் இந்தியா என்று அழைக்கின்றோம் என்று எழுதியுள்ளார்.

1858இல் மார்க்சு அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு என்ற நூலை எழுதினார். இந்நூலுக்கு 1859இல் மார்க்சு ஒரு முன்னுரை எழுதினார். இந்நூலைவிட இந்த முன்னுரை புகழ்பெற்றதாகிவிட்டது. அந்த முன்னுரையில் மார்க்சியத்தின் சாறாக உள்ள ஒரு மேற்கோளைப் படியுங்கள்: ''மனிதர்கள் தங்களது சமூக வாழ்வை நடத்திச் செல்லும் பொழுது சக மனிதர்களுடன் சில திட்டவட்ட மான உற்பத்தி உறவுகளை மேற்கொள்கிறார்கள். அந்த உறவுகள் தவிர்க்க முடியாதவை. இவர்களின் ஆணைக்கு அடங்காதவை. அந்த உற்பத்தி உறவு களின் கூட்டு மொத்தமே சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்பாக - உண்மையான அடித்தளமாக அமைகிறது. இந்த அடித்தளத்தின் மீதே ஒரு சட்டபூர்வ மற்றும் அரசியல் மேற்கட்டுமானம் எழுகிறது. அதற்கேற்ற திட்டவட்டமான சமூக உணர்வுகளும் தோன்றுகின்றன. பொருள் உற்பத்தி வாழ்வு முறையே பொதுவாக சமூக, அரசியல், அறிவுபூர்வ வாழ்வு முறையினை நெறிப்படுத்துகிறது. மனிதனின் உணர்வு நிலை மனிதனின் வாழ்நிலையைத் தீர்மானிக்கவில்லை. மனிதனின் வாழ்வு நிலையே மனிதனின் உணர்வு நிலையைத் தீர்மானிக்கிறது''.

மனிதகுல வரலாற்றைப் பொருள் முதல்வாத அடிப்படை யில் விளக்கும் மார்க்சின் இந்நூல் வெளி வந்த 1859ஆம் ஆண்டில், சார்லஸ் டார்வின் எழுதிய இயற்கைத் தேர்வின் மூலமாக உயிரினிங்களின் தோற்றம் எனும் நூலும் வெளிவந்தது. மார்க்சின் வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கோட்பாட்டுக்கு டார்வினின் நூல் அரண்சேர்ப்பதாக அமைந்தது. 1867 செப்டம்பர் 14 அன்று மார்க்சின் பேருழைப்பால் உருவாக்கப்பட்ட மூலதனம் நூலின் முதல் பகுதி வெளியிடப் பட்டது. முதலாளிய உற்பத்தி முறையில் மூலதனத்தை உருவாக்குவதிலும் பெருக்குவதிலும் அச்சாணியாகச் செயல்படும் உபரி மதிப்பை ஆய்ந்தறிந்து கூறியதே மார்க்சின் இரண்டாவது மாபெரும் பங்களிப்பாகும். அய்ரோப்பிய நாடுகளின் பொருளாதார நிலைமைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மூல தனத்தின் முதல் பாகத்தை மார்க்சு எழுதினார். தன் சிந்தனையை மேலும் விரிவுபடுத்துவதற்காக அமெரிக்காவின், இரஷ்யாவின் பொருளாதாரம் குறித்த எண்ணற்ற நூல்களைப் படித்தார். விரிவான குறிப்புகளை எழுதினார். ஆனால் இவற்றை நூல் வடிவில் எழுதுவதற்குள் 1883 மார்ச்சு 14 அன்று அவர்

மறைந்தார். மனிதகுலத்தின் ஒரு தலை குறைந்தது. ஆனால் நம் தலைமுறையின் மிகச்சிறந்த தலை அது என்று எங்கெல்சு கூறினார்.

மூலதனத்தின் இரண்டாம் பாகம் என்று எழுத மார்க்சு திட்டமிட்டிருந்ததை, எங்கெல்சு இரு பகுதிகளாகப் பிரித்து இரண்டாம் பாகம், மூன்றாம் பாகம் என்று வெளியிட்டார். இரண்டாம் பாகம் 1885ஆம் ஆண்டிலும், மூன்றாம் பாகம் 1894ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டன. உண்மையில் இரண்டாம், மூன்றாம் பாகங்களை மார்க்சும் எங்கெல்சும் இணைந்து எழுதினார்கள் என்றே கருத வேண்டும்.

வெவ்வேறு நாடுகளில் நிலவும் சமூகச் சூழல்களுக்கு ஏற்பவே மார்க்சியத்தைக் கட்டமைக்க வேண்டும் என்பதை மார்க்சியத்தின் மூலவர்களான மார்க்சும் எங்கெல்சும் வலியுறுத்தியுள்ளனர். இலெனினும் மாவோவும் இக்கருத்துக்கு மேலும் செழுமை சேர்த்துள்ளனர். இந்தியாவின் சமூக உற்பத்தியிலும் உறவிலும் சாதி அமைப்பு திட்ட வட்டமான முறையில் செயல்படுகிறது என்பதைக் கருத்தில் கொண்டு, இன்றைய ஏகாதிபத்தியச் சூழலில் மார்க்சியத்தை மறுகட்ட மைப்புச் செய்ய வேண்டிய வரலாற்றுக் கடமை நம்முன் உள்ளது.

## பெரம்பலூரில் அறிஞர் வே. ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு விழா



பெரம்பலூரில் அறிஞர் வே. ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு விழா 31.05.2025 சனி அன்று அரசன் சிற்ற ரங்கத்தில் புலவர் செம்பியன் தலைமையில் நடைபெற்றது. ஆ. இராமர் வரவேற்புரையாற்றினார். செந்தமிழ்வேந்தன், புலவர் அரங்கநாடன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். வேளாண் ஆறுமுகம் தொடக்கவுரையாற்றினார்.

க. தமிழ்மாறன், த. இளவரசன், கி. ஆளவந்தார், தரும. பூபதி, சீ. சிற்றரசு, மு. அறிவழகன், முனைவர் காப்பியன், பா. இராமராசு, கோசிபா உள்ளிட்டோர் உரையாற்றினர். பாவரங்கத்தில் கவிஞர் அறிவுமழை, முனைவர் அகவி, தமிழவன், கவியரசு குணா ஆகியோர் உணர்ச்சி பொங்க ஆனைமுத்து அவர்களைப் பற்றி பாடல் வடிவில் முழங்கினர். அ.சி.சின்னப்பா தமிழர், கே.வீரமுத்து, தி. துரைசித்தார்த்தன், வாலாசா வல்லவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். முனைவர் தமிழ்க்குமரன் நெறிப்படுத்தினார். அசோக்குமார் நவின்றியுரையாற்றினார்.

## மயிலாடுதுறையில் ஆய்வறிஞர் தோழர் வே.ஆனைமுத்து நூற்றாண்டு விழா




15.06.2025 அன்று மயிலாடுதுறை யில் பெரியாரியல் ஆய்வறிஞர் தோழர் வே. ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. கொள்கையாளர்களும் செயல்பாட்டா ளர்களும், பல்வேறு இயக்கத்தவர்களும் அரங்கில் திரண்டிருந்தனர். தமிழ்மண் தன்னுரிமை இயக்கத்தின் நெறியாளர், பேராசிரியர் த.செயராமன் தலைமை யேற்றார். பாவலர் செ.மன்னர் மன்னன் ஒருங் கிணைப்பில் கோவி.அசோகன் வரவேற்புரையும் திராவிடர் விடுதலைக் கழக மாவட்டத் தலைவர் தெ. மகேஷ் தொடக்க உரையும் ஆற்றினர். மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன், பொதுச்செயலாளர் தி. துரை சித்தார்த்தன், தலைமைக் குழு உறுப்பினர் சா. குப்பன், தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் செயலாளர் காஞ்சி அமுதன் ஆகியோர், வே.ஆனைமுத்து அவர்களின் வரலாற்றுப் பங்களிப்பு களை எடுத்துரைத்தனர். மார்க்சிய, பெரியாரிய, அம்பேத்கரிய, இசுலாமிய, தமிழ்த்தேசிய இயக்கத்தினர் மற்றும் கட்சிகளின் பொறுப்பாளர்களான தோழர்கள் பாவெல், தங்க குமரவேல், ப.த.ஆசைத்தம்பி, மு.முகம்மது ரஃபி, சுப்பு மகேசு, பெரியார் செல்வம், விடுதலைச் செல்வன், இர.அ.திலீபன், நாகவரசு, த.ரவி, கடவாசல் குணசேகரன், விடுதலையாளன் முரளி உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். அ.அருண் நேசன் நன்றியுரை வழங்கினார்.

விழாவை சீரிய முறையில் ஏற்பாடு செய்திருந்த பேராசிரியர் த.செயராமன் அவர்களுக்கும் நிகழ்வில் பங்கேற்று கருத்துரையாற்றிய தோழமை இயக்கங் களைச் சேர்ந்த பொறுப்பாளர்களுக்கும் நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்த க.செல்வ அரசன், சித்ரா செயராமன், அத்திகுர் ரகுமான், ரஞ்சித்குமார், விக்னேசுவரன், அபுசாலி, சிவச்சந்திரன் ஆகிய தமிழ்மண் தன்னுரிமை இயக்கத் தோழர்களுக்கும் பாராட்டுகள்.

# தோழர் வே. ஆனைமுத்து நூற்றாண்டு


## தேசிய இன விடுதலை - ஓர் அறிமுகம்



- சா. குப்பன்

மார்க்சியப் பெரியாரியல் அறிஞரும் சிறந்த திறவினை யாளருமான வே.ஆனைமுத்து 21.06.1925இல் பெரம்பலூர் மாவட்டத்தில் முருக்கன்குடி எனும் சிற்றூரில் பிறந்தார். 96 ஆண்டுகள் வாழ்ந்து 06.04.2021 அன்று மறைந்த அவருக்கு 2025 நூற்றாண்டு ஆகும். அவர் தம் அகவை 23 முதல் எழுதியவை 1948இலிருந்து திராவிட நாடு, பல்லவ நாடு, அணில், குமரன் ஆகிய இதழ்களில் வெளி யாயின. அவர் தம் அகவை 25இல் ந. கணபதியுடன் இணைந்து, அவ்விருவர் முதலீட்டில் 'குறள்மலர்' எனும் கிழமை இதழை 1950இல் தொடங்கினர். அவ்விதழுக்குக் கடலூர் திருக்குறளார் வீ. முனிசாமி ஆசிரியராகவும் வே. ஆனைமுத்து துணை ஆசிரியராகவும் விளங்கினர். அவ் விதழில் வே. ஆனைமுத்து, கட்டுரைகள் பல தொடர்ந்து எழுதினார். வே.ஆனைமுத்து தம் வாழ்நாளில் 70 ஆண்டுக் காலத்தில் எழுதியவை ஏராளம்.

வே. ஆனைமுத்து பல்வேறு காலகட்டங்களில் தேசிய இனங்களின் விடுதலை, தமிழ்த்தேசத் தன்னுரிமை பற்றி எழுதிய 47 கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ள "தேசிய இன விடுதலை" எனும் நூல், 'திருச்சி வே.ஆனைமுத்து கருத்துக் கருவூலம்' என்ற பெயரில் 2012இல் வெளியிடப்பட்ட 15 நூல்களுள் ஒன்றாகும். அந்நூலில் பொதிந்துள்ள கருத்து களின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகிறது.




15.08.1947இல் பிரித்தானியர் ஆளும் பொறுப்பை இந்தியர்களிடம் ஒப்படைத்து வெளியேறிய போது 48 விழுக்காடு நிலப்பரப்பு 565 மன்னர்கள் ஆட்சியின்கீழ் இருந்தது. 40 விழுக்காடு பரப்பு - 552 மன்னர்கள் ஆட்சிப் பகுதிகள் இந்தியாவுடனும் 13 மன்னராட்சிப் பகுதிகள் பாகிஸ்தானுடனும் இணைந்தன. காசுமீரம் 27.10.1947இல் ஓர் ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவுடன் இணைந்தது. அய்தராபாத் மன்னராட்சிப் பகுதி 17.9.1948இல் இந்தியாவுடன் இணைத்துக் கொள்ளப் பட்டது. (பிரித்தானிய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியாக இருந்த 60 விழுக்காடு பரப்பு, அவற்றை ஆண்டுகொண்டி ருந்த மன்னர்களுடன் போர்களின் மூலம் 1700-1800க்கு இடையில் சிறுகச் சிறுக பிரித்தானியர் கைப்பற்றினர். 40 விழுக்காடு நிலப்பரப்பை ஆண்ட மன்னர்கள் பிரித்தானியருக்கு அடிபணிந்தும், சமாதான உடன்படிக்கைகள் மூலம் அவர் களின் கட்டளைகளுக்குப் பணிந்து-கட்டுப்பட்டும் மன்னர் களாக நீடித்தனர்).

1934 மே மாதத்தில் பாட்னாவில் கூடிய இந்தியத் தேசியக் காங்கிரசுக் கட்சியின் அகில இந்திய மாநாட்டில் கீழ்க்காணும் தீர்மானம் இயற்றப்பட்டது.

"இந்தியத் தேசியக் காங்கிரசு, இந்தியாவிற்கு விடுதலை பெற்றிடுவதற்காகப் பாடுபடுகிறது. இந்தியத் தேசியக் காங்கிரசு சுதந்திர நாட்டில், வெளியார் தலையீடு இல்லாமல், வயது வந்த அனை வருக்கும் வாக்குரிமையளித்து, அவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அரசியல் நிர்ணய அவை மூலமாக இந்தியாவிற்கு ஓர் அரசமைப்புச் சட்டத்தை வகுத்துக் கொள்ளும்."

1939 நவம்பர் காங்கிரசுத் தீர்மானமும் 1945 சாப்ரு குழுவின் அறிக்கையிலும் மேற்காணும் கருத்தே தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

1938இல் திரிபுராவில் சுபாஷ் சந்திர போசு தலைமையில் நடந்த காங்கிரசு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானத்தில், "உண்மையான கூட்டாட்சி எப்படி இருக்க வேண்டுமென்றால், சனநாயக முறைப்படித் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் அடங்கியதாகவும், சம அந்தஸ்தும் சம வாய்ப்பும் உள்ள சுதந்திரப் பிரதேசங்கள் ஒன்று சேர்ந்த தாகவும் கூட்டாட்சி இருக்க வேண்டும்" என்று கூறப்பட்டது.

காந்தியடிகள் "மாநிலங்கள் விரும்பி விட்டுக் கொடுக்கும் அதிகாரங்கள் மட்டுமே நடுவண் கூட்டாட்சி அரசாங்கத்திடம் இருக்க வேண்டும். மற்ற வகையில் ஒவ்வொரு மாநிலமும் சுதந்திர அந்தஸ்துடன் விளங்க வேண்டும்" என்கிற கருத்தைக் கூறியிருந்தார்.

ஆனால் நடந்தது என்ன?

15.08.1947இல் அரசுரிமை பெற்ற இந்தியாவுக்கான அரசமைப்புச் சட்டம் உருவாக்குவதற்கான அவை 09.12.1946இல் கூடியது. அதாவது அதிகாரம் கைமாற்றப்படுவதற்கு 250 நாள்கள் முன்னதாகக் கூடியது எப்படி?

09.12.1946இல் கூடிய போது அரசமைப்புச் சட்ட யாப்பு அவையில் மொத்தம் 389 உறுப்பினர்கள் இருந்தனர். 18.07.1947இல் பிரத்தானிய நாடாளுமன்றத்தில் இந்தியா, பாகிஸ்தான் என இரு நாடுகளின் பிரிவினைச் சட்டம் நிறைவேறியது. இதனால் பாகிஸ்தான் பகுதியைச் சேர்ந்த 90 உறுப்பினர்கள் கழிந்தனர்.

9 மாகாணச் சட்டமன்றங்களுக்கு 1946இல் நடந்தத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் அரசமைப்புச் சட்ட யாப்பு அவைக்கு வந்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 229. 552 மன்னராட்சிப் பகுதிகள் இந்தியாவுடன் இணைந்த போதிலும், 29 மன்னர்கள் சார்பாக மட்டும் அரசமைப்புச் சட்ட யாப்பு அவைக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை 70 பேர்கள் ஆவர். 14.08.1947 அன்று கூடிய போது அவையின் மொத்த உறுப்பினர்கள் 299 (229 + 70).

மேலே கண்டுள்ள 229 உறுப்பினர்கள் 1946இல் மாகாண சட்டமன்றங்களுக்கு நடைபெற்றத் தேர்தலில், வயது வந்த (அகவை 21 நிறைவடைந்த)வர்களுள் வரி செலுத்துவோர், குறிப்பிட்ட அளவு சொத்துடையோர் என 14 விழுக்காட்டினர் மட்டுமே வாக்குரிமை பெற்றவர்களாக வாக்களித்தனர்.

இப்படி அமைந்த அவையில் 1949 நவம்பர் 26 அன்று நிறைவேற்றப்பட்ட அரசமைப்புச் சட்டப்படி தான் 26.01.1950 முதல் இன்று வரை அரசின் உறுப்புகள் இயங்கி வருகின்றன.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முதல் பிரிவில் 'இந்தியா மாநிலங்களின் ஒன்றியம்' என்று கூறப்பட்டுள்ளதன்றி, அரசமைப்புச் சட்டத்தில் எந்த இடத்திலும் 'கூட்டாட்சி' என்ற சொல் இடம்பெறவே இல்லை. அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையிலும் "இறையாண்மை கொண்ட சோசலிச, மதச் சார்பற்ற சனநாயகக் குடியரசு" என்று தான் உள்ளதே தவிர, 'கூட்டாட்சி' என்ற சொல் இடம்பெறவில்லை.

அரசமைப்புச் சட்டத்தின் ஏழாம் அட்டவணையின்கீழ் பட்டியல் 1 - ஒன்றிய அதிகாரங்கள் 97 பொருள்களும், பட்டியல் 2 - மாநிலங்களின் அதிகாரங்கள் 61 பொருள்களும், பட்டியல் 3-ஒத்திசைவு (பொது) அதிகாரங்கள் 47 பொருள்களும் பிரிவு 248 எஞ்சிய அதிகாரங்கள் அனைத்தும் ஒன்றிய அரசுக்கு எனக் கூறப்பட்டுள்ளது. இவற்றுடன் பிரிவு 249இல் மாநில அரசுகளின் அதிகாரத்தின்கீழ் உள்ள பொருள்கள் தொடர்பிலும் தேவை எனின் நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

1976 நெருக்கடி நிலையின் போது அரசமைப்புச் சட்டத்தில் 42ஆம் திருத்தத்தின் மூலம் பட்டியல் 2 மாநிலங்களின் அதிகாரத்தின் கீழ் இருந்த கல்வி, காடுகள், வன விலங்கு-பறவைகள் பாதுகாப்பு ஆகியன பட்டியல் 3 ஒத்திசைவு (பொது) அதிகாரங்கள் பட்டியலுக்கு மாற்றப்பட்டன.

1935இல் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 'இந்திய அரசாங்கச் சட்டம்' (Government of India Act-1935) கூட "அனைத்திந்திய மாகாணங்கள் மற்றும் மன்னர்களின் கூட்டமைப்பு" என்று கூறியது. அதில் மாகாணங்கள் தன்னாட்சி அலகுகளாக இயங்க வகை செய்யப்பட்டிருந்தது.

பிரித்தானியர் ஆட்சியில் இருந்த மாகாணத் தன்னாட்சி அளவிற்குக் கூட விடுதலை பெற்ற இந்தியாவுக்கான அரசமைப்புச் சட்டத்தில் மாநிலங்களுக்குத் தன்னாட்சித் தன்னுரிமைகள் வழங்கப்படவில்லை.

நாடாளுமன்றம் விரும்பினால் சட்டம் இயற்றுவதன் மூலம் புதிய மாநிலங்களை உருவாக்கவும், ஏற்கனவே உள்ள மாநிலங்களின் பகுதிகளையோ, எல்லைகளையோ, பெயர்களையோ மாற்றலாம் என அரசமைப்புச் சட்டப் பிரிவு 3 கூறுகிறது.

1947 ஆகஸ்டில் 13 மாநிலங்களே இருந்தன. இப்போது 28 மாநிலங்களும் 9 ஒன்றிய ஆட்சிப் பகுதிகளும் உள்ளன. தெலுங்கு பேசும் மக்களுக்கு ஆந்திரப்பிரதேசம் தனி மாநிலமாக்கிட வேண்டும் என்பதற்காக பொட்டி சிறீராமுலு என்பவர் உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, உயிர் துறந்த பின்னரே 01.10.1953இல் சென்னை மாகாணத்தில் இருந்து ஆந்திரம் தனி மாநிலமாகப் பிரிக்கப்பட்டது. எஞ்சிய சென்னை மாகாணம் 01.11.1956இல் தமிழ்நாடு, கேரளம், கருநாடகம் என மொழிவழி பிரிக்கப்பட்டன. மராத்தி மொழிப் பேசும் மக்கள் வாழிடங்கள் தனியாக மகாராட்டிர மாநிலம் அமைக்கப்படக் கோரியப் போராட்டத்தில் 107 பேர் உயிர் துறந்தனர். அதன் பின்னரே 01.05.1960இல் பம்பாய் மாகாணம் மகாராட்டிரம், குசராத்து என மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன. மணிப்பூர், மிசோரம், மேகாலயா, திரிபுரா ஆகியவை மொழிவழியாக நான்கு மாநிலங்களாக 20.01.1972இல் பிரிக்கப்பட்டன.

31.10.2019இல் ஜம்மு-காசுமீரத்திற்கு தனி உரிமை அளிக்கப்பட்டிருந்த அரசமைப்புப் பிரிவு 370 நீக்கப்பட்டதுடன் ஜம்மு-காசுமீரமும் லடாக்கும் இரண்டு ஒன்றிய ஆட்சிப் பகுதிகளாக்கப்பட்டன என்பது தனி வரலாறு ஆகும்.

மேற்கூறிய வரலாற்று அடிப்படையில் தேசியம் என்றால் என்ன? ஏன் வேண்டும் தமிழ்த் தேசத் தன்னுரிமை (Autonomous Tamilnadu) அல்லது சுயநிர்ணய உரிமை உடைய தமிழ்நாடு என்பதை அறிதல் வேண்டும்.

**தேசிய அடையாளத்தின் தோற்றம்**

அய்ரோப்பா கண்டத்தில் 15, 16ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட அறிவுப் புரட்சி, அறிவியல் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, அரசியல் விழிப்புணர்ச்சி, தேசம்-மொழி பற்றிய கருத்துருவாக்கம், மரபு வழி பண்பாட்டுணர்ச்சி, பகுத்தாய்தல் - பன்முகச் சிந்தனை மலர்ச்சி ஆகியவை மக்களுக்குப் புத்தெழுச்சியை உருவாக்கியது. 1760-1840 காலக்கட்டத்தில் ஏற்பட்ட தொழில் புரட்சியின் காரணமாக புதிய பொருளுற்பத்தித் தொழிற்சாலைகள் உருவானதால் புதிதாக தொழில் முதலாளி வகுப்புத் தோன்றியது. தொழிலாளர் வகுப்பும் தோன்றியது.

1789இல் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சி நிலப்பிரபுக்களுக்குப் பாதுகாப்பாக இருந்த மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது. இதனையொட்டி பிரெஞ்சு மக்களுக்குத் தேசியம் என்ற கோட்பாடு முகிழ்த்தது. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பே அய்ரோப்பாவில் டச்சு மொழி-இன மக்கள் மொழி அடிப் படையில் 1581இல் நெதர்லாந்து என்ற தனி நாட்டை உருவாக்கினர். நெதர்லாந்தின் இப்போதைய மக்கள் தொகை 1.83 கோடி ஆகும்.

பல ஆட்சிப் பகுதிகளாக இருந்த இத்தாலி, மொழி அடிப்படையில் 1859-1870இல் ஒரு நாடாக உருவானது. இத்தாலியின் இப்போதைய மக்கள் தொகை 5.91 கோடி. 25 ஆட்சிப் பகுதிகளாக இருந்த செருமனி, மொழி அடிப்படையில் 1866-1871இல் ஒரே நாடாக உருவாயிற்று. முதலாளியப் பொருளுற்பத்தியின் உந்துவிசையால் சமூகம், அரசியல் தற்சார்பு, மொழி, வரலாறு, பொது நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் தனித்தனி நாடுகள் அய்ரோப்பாவில் அமைந்தன. இப்போது 74.4 கோடி மக்கள் தொகைக் கொண்ட அய்ரோப்பா கண்டத்தில் உள்ள 44 நாடுகள் அய்க்கிய நாடுகள் அவையில் உறுப்புகளாக உள்ளன. இவற்றுள் 27 நாடுகள் இணைந்து 'அய்ரோப்பிய ஒன்றியம்' என்ற அரசியல், பொருளாதார கூட்டமைப்பாக 01.11.1993 முதல் செயல்படுகிறது.

பிரிட்டனுடன் இருந்த தெற்கு அயர்லாந்து 1922இல் ஓர் உடன்படிக்கையின் மூலம் தனி குடியரசு நாடாகி உள்ளது. அயர்லாந்தின் இப்போதைய மக்கள் தொகை 53 இலட்சம் ஆகும்.

இரஷ்யாவில் சோசலிச புரட்சியை வழிநடத்தியத் தலைவர் வி.அய். இலெனின் 1912இல் அவரவர் பேசும் மொழி அடிப்படையில் மொழிவழி குடியரசுகள் ஏற்படுத்தப் படும் என்றும் அவ்வப் பகுதியின் மொழியே ஆட்சி மொழி யாக ஆக்கப்படும் என்ற நம்பிக்கையை அம்மக்களுக்கு உண்டாக்கினார். அதேபோல புரட்சி வெற்றியடைந்த பின் 1917-1922க்கு இடையில் 15 வெவ்வேறு மொழி பேசும் மக்கள் தத்தம் மொழியின் அடிப்படையில் தனித்தனி குடியரசுகளைப் பெற்று, 1922 முதல் 1991 வரை "சோவியத்து சோசலிச குடியரசுகள் ஒன்றியம்" என்ற கூட்டாட்சியாக விளங்கியது. 1991 இறுதியில் தனித்தனி நாடுகளாகப் பிரிந்து விட்டன. மொழி அடிப்படையில் 16.12.1971 பாகிஸ்தானி லிருந்த 'வங்க தேசம்' தனி நாடாயிற்று.

**தமிழ்த் தேசம் - தமிழ்த் தேசியம்**

1. ஒரு பொது மொழி.
2. அம்மொழிப் பேசப்படும் தொடர்ச்சியான வாழ்விடப் பரப்பு.
3. அதற்குரிய நெடுங்கால வரலாறு.
4. அந்த வரலாற்று வழி உருவாகும் பண்பாட்டு அடிப் படையில் மக்களுக்குள் வளரும் பொதுவான உளவியல்.

இந்த நான்கும் அமையப்பெற்ற மக்கள் சமுதாயத் தையே தேசம் - தேசிய இனம் என்று வரையறுக்கின்றோம்.

2500 ஆண்டுகளுக்கு முந்திய நூலான தொல்காப்பியத்தில் வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலகம் என்று கூறப்பட்டுள்ளது. தமிழர்கள் வாழும் நாடு என்பதைக் குறிப்பதாகும்.

'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்' என கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் தம் தேவாரப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். 1908இல் பண்டித அயோத்தி தாசர் 'தமிழன்' என்ற பெயரில் இதழ் நடத்தினார். 1905இல் தஞ்சை உலகநாதம் பிள்ளை 'தமிழகம்' என்ற இதழ் நடத்தியுள்ளார்.

1920 முதல் சென்னை மாகாணத்தில் இந்தியத் தேசியக் காங்கிரசுக் கட்சி, மொழி வழியில் 'தமிழ்நாடு பிரதேச காங்கிரசுக் கமிட்டி', 'ஆந்திரப் பிரதேச காங்கிரசுக் கமிட்டி', 'கேரள காங்கிரசு கமிட்டி' என இயங்கியுள்ளன. சென்னை மாகாண காங்கிரசுக் கமிட்டி என செயல்படவில்லை. 1928இல் மோதிலால் நேரு தலைமையிலான குழுவும் மொழிவழி மாகாணங்கள் அமைய வேண்டும் எனக் கூறியது. 1925 முதல் 1946 வரை இந்தியப் பொது வுடைமைக் கட்சி மொழிவழி தேசிய இனங்கள் இருப்பதை ஏற்றிருந்தது. அதன்பின் அதனைப் புறந்தள்ளிவிட்டது என வே. ஆனைமுத்து குறிப்பிட்டுள்ளார்.

1938இல் பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடமாக்கியதை எதிர்த்த போராட்டத்தின் போது 11.09.1938 அன்று சென்னை கடற்கரையில் நடந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் பெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே' என அறிவித்தார்.

1938 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மகளிர் - கைக் குழந்தையுடன் சிறை சென்ற பெண்கள் என மொத்தம் 1,198 பேர் ஏற்ற சிறை வாழ்க்கையும் அப்போது சிறையில் நடராசன், தாலமுத்து மாண்டதும் தமிழர்களிடையே தாய்மொழி உணர்வும் தமிழர் என்ற ஓர்மை உணர்வும் பெருகக் காரணமாயிற்று. மீண்டும் 1965இல் ஏற்பட்ட இந்தி மொழித் திணிப்பிற்கு எதிரானப் போராட்டத்தில் அரசின் அடக்குமுறையினாலும் துப்பாக்கிச் சூட்டிலும் இரு நூற்றுக் கும் மேற்பட்டத் தமிழர்கள் கொல்லப்பட்டதும் ஆயிரக் கணக்கானத் தமிழர்கள் சிறைப்படுத்தப்பட்டதும் தமிழ்-தமிழர்-தமிழ்நாடு என்ற பேருணர்ச்சியை ஏற்படுத்தியது.

ஒன்றிய அரசு மாநிலங்கள் செயல்படுவதற்குப் பல்வேறு முட்டுக்கட்டைகளைக் காலந்தோறும் உருவாக்கி வருகிறது. அதிகாரங்கள் ஒன்றியத்தில் குவிக்கப்பட்டு வருகிறது.

ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே கட்சி, ஒரே ஆட்சி என ஒற்றை ஆட்சி முறையை நோக்கிய இந்திய வல்லாட்சியின் போக்கினால் தேசிய இனங்களின் எழுச்சித் தடுக்க முடியாததாக உருவெடுக்கின்றது. தேசிய இனங்கள் மீதான ஒடுக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க தேசிய இன உணர்வும் தூண்டப்படுகிறது.

தமிழ்த் தேசிய இன எழுச்சி என்பது ஒற்றைக் கூறு கொண்டதாக இல்லாமல் சாதி ஒழிப்பு, முதலாளிய எதிர்ப்பு, சமானியச் சமுதாய அமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய பன்முகத்தன்மை கொண்டதாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். 'இந்தியத் தேசியம்' என்ற பார்ப்பனிய-முதலாளியப் பொய்க் கட்டுமானத்தை தகர்த்திட வேண்டும்.

‘இந்தியா ஒரு நேஷனா?’ என்ற வினாவை பெரியார் 1930இல் எழுப்பி, ‘பல நேஷன்களைக் கொண்ட துணைக் கண்டம்’ என்பதைத் தெளிவுப்படுத்தியுள்ளார்.

தேசிய மறுமலர்ச்சிக்கு வருண-சாதியமைப்பு என்னும் தளையை அறுத்தெறிவது தேவையாகின்றது. சமூக நீதிப் போராட்டமும் மொழிவழித் தேசிய எழுச்சியும் ஒரு முனையில் சேர்த்ததில் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ்நாடு தான் முதலாவது ஆகும். காரணம் பெரியார்-பெரியாரின் கொள்கைகள்.

‘‘தமிழன் சுதந்திர ஆட்சிக்கு வரும் வரை தமிழன்-தமிழ்நாடு ஒரு நாளும் சூத்திரத் தன்மையிலிருந்து, அடிமைக் குடியாய் இருப்பதிலிருந்து கடுகளவும் மாற்றமடைய முடியாது’’ என 1960இலும் 17.9.1973இலும் பெரியார் வலியுறுத்தி யுள்ளார்.

இந்தியத் தேசியம் என்பது இந்துத் தேசியமாக - வல்லாண்மையாக-ஒற்றைக் கலாச்சாரமாக்கும் முயற்சி களை முறியடித்தாக வேண்டும். சனநாயகம் என்ற பெயரா லேயே சனநாயகத்தை ஒழிக்கும் முயற்சியையும் ‘தமிழ்த் தேசியம்’ என்ற பெயராலேயே தமிழர் ஓர்மைக்கு எதிராக உள்ள சாதியத்தை வளர்க்கும். தமிழ்த் தேசியத்தை அழிக்கும் முயற்சிகளையும் புறங்கண்டாக வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ். இயக்கம் ஒவ்வொரு அரசியல் கட்சி யிலேயும் இந்து கலாச்சார உணர்வை உட்புகுத்தி முற்போக்கு உருவாவதைத் தடுத்து வருகின்றது.

தாங்களே விரும்பி ஒன்றுசேருகிற தேசிய இனவழிப்பட்ட சோசலிச (சமதரும) குடியரசுகள் (மாநிலங்கள்) ஒருங் கிணைந்த-உண்மையான ஒரு கூட்டாட்சியினை இந்தியாவில் காண்பது என்கிற குறிக்கோள் நெடுந்தொலைவில் இருக்கிற ஒன்றே ஆகும்.

இந்தியாவை ஒரு நாடாகப் பிணைத்து வைத்திருப்பது பார்ப்பனியம். பார்ப்பனியம் வீட்டு வாழ்க்கை, சமய வாழ்க்கை, சமுதாயம் ஆகிய துறைகளில் ஆதிக்கம் பெற்றுள்ளதோடு கல்வி, அரசு நிர்வாகம், நில உடைமை அமைப்பு என எல்லாவற்றிலும் பார்ப்பனிய முறையை ஒழிக்கும் நோக்கில் போராட வேண்டும்.

தமிழ்நாட்டிற்குத் தன்னுரிமை என்பது ஓர் அரசியல் கருத்தியலும் குறிக்கோளும் ஆகும். இக்குறிக்கோளை அடைந்திட தொடர்ந்து போராடுவோம்! ❖

## புதிய சிந்தனையாளன் வளர்ச்சி நிதி
## மே, சூன் - 2025

| | |
|---|---|
| பேரா. மு.திருமாவளவன், சென்னை | 2000.00 |
| து.செ.நிறைமொழி, காட்டுமன்னார்கோவில் | 1000.00 |
| மா.முருகேசன்-அலமேலு, தீத்தாண்டுப்பட்டு | 1000.00 |
| பானுமதி-சம்பந்த சிவக்குமார், காஞ்சிபுரம் | 1000.00 |
| சுக. முல்லை-சே.சு.வினீத் நாராயணன், திருவள்ளூர் | 500.00 |
| க.நாகராசன், அன்னனூர் | 200.00 |

## திருவாரூர் தங்கராசு நூற்றாண்டு விழா




பெரியாரின் பெருந்தொண்டர் திருவாரூர் கே.தங்கராசு அவர்களின் நூற்றாண்டு விழா தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் 6.4.2025 ஞாயிறு மாலை 5 மணிக்கு சென்னை, தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெற்றது. தா.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை இராமக்கிருட்டிணன் தலைமை தாங்கினார். வழக்குரைஞர் செ.துரைசாமி, அர.திருவிடம், இயக்குநர் கரு.பழனியப்பன், வாலாசா வல்லவன், சீனி.விடுதலை அரசு, எஸ்.எஸ்.பா. ரூசோ, வெ.ஆறுச்சாமி, எம்.ஆர்.ஆர்.வாசு விக்ரம் உள்ளிட்டோர் உரையாற்றினர். அமைச்சர் க.பொன்முடி, சிறப்புரையாற்றினார். திருவாரூர் தங்கராசு அவர்களின் மருமகன் ஆர்.பிரசாத் நன்றி கூறினார்.

## வாழ்க்கைத் துணைத் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | **ந.வெற்றிச்செல்வன்** |
| பிறந்த தேதி | : | 07.10.1987 |
| கல்வி | : | பி.எஸ்சி (கணிதம்) |
| தொழில் | : | வணிகம்<br>உஷா எழுதுபொருள் அங்காடி |
| தந்தை | : | சி.நடராசன் |
| தாய் | : | வ.உஷாராணி |
| பெண் | : | வயது 30க்கு மேல் இருக்க வேண்டும். |
| தொடர்புக்கு | : | சி.நடராசன்<br>எண்.24 எ/65, காமாட்சி அம்மன் சன்னதி தெரு,<br>காஞ்சிபுரம் - 631 502. |
| கைப்பேசி | : | 9655366977 |



# நாட்டு நடப்பு.....



- பேராசிரியர் **இரா. சோதிவாணன்**

தீண்டாமைத் திருவிழாவின் தேராய்ப் பூணூல்
திருக்கூட்டம் இழுத்துவரும் இன்றும் தோழா!
தூண்டாமைச் சாதிவேற்றுமைக் கோட்பாடு
துண்டாடும் பார்ப்பனியக் குப்பைமேடு
வேண்டுபல உதவும்'சேவை' விழாவின் முன்னர்
மேடையிலே வீற்றிருந்த பார்ப்பார் மேலே
தீண்டாமல்(படாமல்) போங்களெனப் பயிராளர்தாம்
(விவசாயி)
மேடைமேல் ஏறுகையில் சொன்னாள்இலதாப் பாப்பாத்தி
(நடிகர் இரசனியின் மனைவி)

காற்றுவீசி எல்லோரும் வாழத் தீண்டும்...
காஞ்சிமடத் தலைவர் தீட்டாகுமென்று
நோற்றுவந்த ஆளுநராக தமிழிசைக்கே
தூக்கிவீசிப் புடவைதனை ஈந்தார் காண்க.
நேற்றுவந்த மடத்து இளங்கணேச சர்மா.
நேர்மரபை மீறாமல் பற்றாளர்க்கு
ஏற்புப் பொருளைத் தூக்கிப் போடுகின்றார்.
என்றைக்குத் தொலையுமோ கொடுந்தீண்டாமை?

மெய்யியலின் அனைவர்க்காம் அன்பைவிட்டு
மேல்வேடம் பூண்டிருக்கும் மதுரைஆதீனம்
பொய்யியலின் சங்கியாகச் சைவசித்தாந்தப்
பொழிமாநாட்டிற்குச் சென்னை வருகையில்
'வெய்யியலின் முகமதியர் வீற்றுவந்த
மகிழுந்தால் என் மகிழுந்தை இடித்து
அய்யய்யோ எனைக் கொல்ல முயன்றார்' என்றார்.
அடாவடிப் பொய்யெனக் காவலர் நிறுவி விட்டார்.

மானுடத்தின் உயிர்ப்பினையே ஊமையாக்கிப்
பால்குடத்தில் நஞ்சு ஊற்றலாய் இளம்பெண்கள்
தேனுடம்பில் நச்சுமுட்கள் தைக்க விட்டுத்
தேம்பியழும் உயிர்வதையைக் களித்ததோடு
ஆண்பாலார், பெண்பாலார் பிறந்த மேனி
அலங்கோலக் காணொளிப் படமெடுத்துக்
காணும்போதே உணர்ச்சியழல், உகளுமாறு
கைக்கிளைக் காமுகர்க்கு விருந்து வைத்தார்
(பொள்ளாச்சியில்)

முறைபிறழ்ந்து முந்நூற்று இளம்பெண்கள்தம்
முழுஉடம்பை இறைச்சியாகக் கடித்துத் துய்த்த
கறைஉறைந்த பொள்ளச்சிக் கடிவெறி நாய்கள்
கடுஞ்சிறையில் இறக்குவரை வாழ்நாள் முற்றும்
நிறைத்தண்டனை பெறுகவெனத் தீர்ப்பளித்த
நெஞ்சுறுதி மிக்க நந்தினி தேவிப் போற்றிப்
பறைஅறைந்து நாடே கொண்டாடக் குற்றம்
புரிந்த ஓநாய்க் கூட்டம் கதறித் துடிக்கும்.



பகை நடுங்க வாழும்

# பெருமிதத் தலைவர் கு.இரா.

**இரணியன்**

திராவிட இயக்க வரலாற்றில் உயிர்ப்பு மிகுந்த செயல் பாடுகளின் களமாகக் கோவை மண்டலம் எப்பொழுதும் விளங்கி வருகிறது.

1885இல் ''திராவிட பாண்டியன்'' இதழையும், பின்னர் ''ஒரு பைசாத் தமிழன்'' இதழையும் தொடங்கியவர் அயோத்தி தாசர். 1890இல் ''இந்திய பவுத்தர் சங்கத்''தையும், 1891இல் ''திராவிட மகாஜன சபை''யையும் தோற்றுவித்தவர் அயோத்தி தாசர். தமிழ்ச் சமூக வரலாற்றில் ஒரு சிந்தனைக் கிளர்ச்சியைத் தோற்றுவித்த இந்த அறிஞர் கோவை மண்டலத் தொல்குடி மரபினர் என்று சமகால வரலாற்றறிஞர்கள் கூறுகிறார்கள்.

சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம் ஆகியவற்றின் முழுமைச் செம்பரிதியாகத் தோன்றிய தந்தை பெரியார், அன்றைய விரிந்த கோவை மண்டலத்தின் ஒரு பகுதியாக விளங்கிய ஈரோடு நகரைச் சேர்ந்தவர்தாம்.

பெரியாரின் சிந்தனைத் திரட்சியுடன் மாபெரும் தமிழ்ப் பாவியமாக ''இராவண காவியம்'' படைத்த புலவர் குழந்தை அவர்களும், பெரியாரின் போர்ப்படைத் தளபதியாகத் திகழ்ந்த பழைய கோட்டை அருச்சுனன் அவர்களும் கோவை மண்டலத்தின் பகுதியான ஈரோட்டுக்கு உரியவர்களே.




தமிழ் இலக்கியப் புலமையுடனும், சமூக வரலாற்று வெளிச்சத்துடனும், திராவிட இயக்கச் சிந்தனைகளைப் பரப்பிய வழக்கறிஞர் கஸ்தூரி ஐயா அவர்களும், பேராசிரியர் கு.வெ.கி. ஆசான் ஐயா அவர்களும் கோவையின் ஒளி விளக்குகள்.

இத்தகு பெருமைகள் நிறைந்த கோவை மண்ணில், திராவிட இயக்கச் சிந்தனைகளுக்கு ஒளியேற்றி, ஆயிரக் கணக்கான இளைஞர்களை அணிதிரட்டி, தமிழ்ச் சமூகத் திற்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளுக்காக ஓய்வறியாமல் ஓர் இளைஞர் போராடிக் கொண்டிருக்கிறார் என்றால், அது கோவை கு. இராமகிருட்டிணன் அவர்கள்தாம்.

75 அகவையை எட்டிய ஒருவர் இளைஞரா என வினா எழுப்பலாம். இராமகிருட்டிணன் அவர்களைப் பொறுத்த வரை அவர் முறுக்கம் தளராத 25 அகவை இளைஞரே. அவர் உடலையும் முதுமை அண்டவில்லை! அவர் மனத்தையும் முதுமை அண்டவில்லை! அவர் சிந்தனைகளை மூப்பு நெருங்கவே இல்லை. இளமை மிளிர, ஓய்வறியாமல் இயங்கிக் கொண்டு இருக்கும் களப் போராளி அவர்.

கு.இராமகிருட்டிணன் அவர்களின் வரலாறே களப் போராட்டங்களின் வரலாறு.

புறநானூற்றிலே ஒரு பெண், தாய் ஒருத்தியிடம் கேட்பாள், 'எங்கே உன் மகன்?' என்று.

அதற்கு அந்தத் தாய் கூறுவாள், ''எனது இந்த வயிறு புலி தங்கியிருந்து புறப்பட்டுச் சென்ற குகை. அவன் போர்க்களத்தில்தான் சமர் புரிந்து கொண்டிருப்பான்''.

இருபதாம் நூற்றாண்டிலும் ஒரு தாய் அப்படிக் கூறியிருப்பாரென்றால், அது தோழர் கு. இரா. அவர்களின் தாயாகத்தான் இருக்க முடியும். தம் தாய் மறைவுற்றபோது கூட, செறுமுகம் கண்ட சிறையாளியாகவே அவர் திகழ்ந்தார். தாயின் மறைவுத் துயர நிகழ்வுக்குக்கூட அவரை வெளியே விட அஞ்சியது அரசு. தோழர்களுக் கெல்லாம் நேசமும் கனிவும் நிறைந்த தோழமை என்றாலும் அடக்குமுறை ஆட்சியாளருக்கு அவர் அடங்க மறுக்கும் அரிமா. எனவே கண்கொத்திப் பாம்புபோல் அவரைக் கண்காணித்துக் கொண்டே இருப்பதுதான் காவல்துறையின் கடமையாக இருந்தது. ஏன் இந்த நிலை?

* அவர் சாதி மதங்களையும் மூடநம்பிக்கைகளையும் கடவுள் நம்பிக்கைகளையும் மறுப்பவர்; எதிர்ப்பவர். இவற்றை ஒழிக்கப் போராடுபவர்.
* அவர் ஒரு பெண்ணுரிமைப் போராளி. பெண்ணடிமைத் தனத்திற்கு எதிரான சிந்தனைகளைச் சமூகத்தில் இடை விடாமல் விதைப்பவர்.
* ஆரிய சனாதனத்தை, வேதியத்தை, பார்ப்பனிய மடமைகளை எதிர்ப்பவர். அவற்றை அழிக்கப் போராடுபவர். மனுநீதியைத் தீயிட்டுக் கொளுத்தியவர். பார்ப்பனிய மேலாண்மையை அம்பலப்படுத்தும் மாநாடுகளை நடத்தியவர். சாதி மறுப்பு, மத மறுப்புத் திருமணங்களை முன்னின்று நடத்தி வைப்பவர்.
* தமிழ்நாட்டின், தமிழ்ச் சமூகத்தின் உரிமைகள், உடைமைகள் பறிக்கப்படும்போது, ஒரு நொடியும் அயர்ந்திருக்காமல், உடனே எழுந்து அனைத்து மக்களையும், அனைத்து இயக்கங்களையும் ஒன்றுதிரட்டிப் போராடுபவர்.

* தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு அரணாக நின்றவர். தமிழீழ மக்களுக்கு நேர்ந்த அவலங்களை நாடெங்கும் அறியச் செய்தவர். தமிழீழப் போராளிகளைத் தமிழக மக்களுக்கு அறிமுகம் செய்தவர். போராளிகளுக்கு உதவுவதே தமிழ் மக்களின் தலையாய கடமை என்பதைத் தமிழ் நெஞ்சங்களில் விதைத்தவர். உயிரைப் பணயம் வைத்து ஈழப் போர்முனைக்குச் சென்று திரும்பியவர். ஈழ விடுதலைப் போர்க் கண்காட்சியைத் தமிழகம் முழுவதும் நடத்தி மக்களுக்கு உணர்வூட்டியவர்.
* ஆற்றுநீர்ப் பங்கீட்டில் தமிழகத்திற்கு இரண்டகம் புரியும் அண்டை மாநிலங்களுக்கு எதிராக, அனைத்துத் தரப்பி னரையும் ஒன்றுதிரட்டிப் போராடிய போராட்டங்கள் பலவற்றை நடத்தியவர்.
* ஞாயங்களுக்காக நடத்தும் எல்லாப் போராட்டங்களுக்கும் இளைஞர் பட்டாளத்தை ஒன்றுதிரட்டும் ஆற்றலாளர்.
* பெரியாரிய நெறியிலிருந்து என்றும் தடம் மாறாதவர். சிறு சிறு காரணங்களுக்காகப் பெரியாரியச் சிந்தனை யாளர்கள் பிளவுபட்டு நின்றாலும், வேற்றுமைகளை ஒதுக்கி வைத்துவிட்டுப் பெரியாரியத் தோழர்களை ஒருங்கிணைக்கும் பேருள்ளம் படைத்தவர். ஆனைமுத்து ஐயா அவர்களின் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்கான கிளையோ, அமைப்போ கோவையில் இல்லாத போதும், அந்த மார்க்சியப் பெரியாரியப் பொது வுடைமைக் கட்சியின் மாநாட்டை, தம் தோழர்களைத் திரட்டி, தாமே முன்னின்று கோவையில் நடத்திக் காட்டியவர்.

அவருடைய போராட்டங்களின் வடிவங்கள் மிகவும் புதுமையானவை. எல்லோரும் உண்ணாவிரதம் என்று போராட்டங்களை நடத்துவார்கள். தோழர் கு.இரா. அவர்கள் உண்ணும் விரதப் போராட்டங்களை அறிமுகப்படுத்தினார்.

மதக் கசடர்கள் கஜபூஜை ஊர்வலம் என்று யானை களைத் திரட்டி ஊர்வலம் நடத்தினர். தோழர் அவர்கள் ஆயிரம் கழுதைகளுடன் ஊர்வலம் என அறிவித்தார். நாடே வியப்பில் ஆழ்ந்தது.

1983 இலங்கை வெளிக்கடைச் சிறையில் நிகழ்ந்த தமிழர் மீதான கொலை வெறியாட்டத்தைத் தொடர்ந்து, இலங்கை முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிரான கலவரம் வெடித்தது. பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொன்று வீசப்பட்டார்கள். அந்த நிலையில், தமிழீழ மக்களுக்கு நேர்ந்த அவலத்தை உலகிற்கு எடுத்தி யம்பும் வகையில், கோவையில் மாபெரும் மண்டையோட்டு ஊர்வலத்தைத் தோழர் கு.இரா. நடத்திக் காட்டினார். இந்தக் காட்சி உலகம் முழுதும் பரவி அதிர்வலைகளை உருவாக்கியது.

தோழர் கு. இராமகிருட்டிணன் உறங்காத் தமிழ மகன்! கண்ணயராத போராளி! கோவையின் விந்தை மனிதர்! இளைஞர்களை முன் நடத்தும் தலைவன்! மூத்தோருக்கு நெஞ்சு உவந்த தோழர்! அவர் இருப்பு தமிழினத்திற்கு ஒரு தெம்பு! பகை நடுங்க வாழும் பெருமித வாழ்வு அவரது வாழ்வு! தோழர் கு.இரா. வாழவேண்டும் ஒரு நூறாண்டுகள்!

❖

# வேலூரில் மே 20, 21 இரு நாள்கள் மார்க்சியம், பெரியாரியல், அம்பேத்கரியல் கொள்கைப் பயிற்சி வகுப்பு



வேலூரில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி ஏற்பாடு செய்த கொள்கைப் பயிற்சி வகுப்பு 20.05.2025 அன்று காலை 10 மணிக்கு தமிழியக்கத்தின் மாநிலச் செயலாளர் மு. சுகுமார், வேலூர் அகரமுதல இலக்கிய மன்றத் தலைவர் வெ. சோலைநாதன் ஆகியவர்கள் வாழ்த்துரைகளுடன் தொடங்கியது.

திராவிட இயக்கமும் தமிழ்த் தேசியமும் எனும் பொருள் பற்றி வாலாசா வல்லவனும் சுயமரியாதை இயக்கம் எனும் பொருள் பற்றி தி. துரைசித்தார்த்தனும் அவ்வப் பொருள் பற்றிய வரலாற்றையும் இன்றைய நிலையையும் விளக்கினர். பிற்பகல் தமிழ்த்தேசத் தன்னுரிமை பற்றி சா.குப்பனும் மேதை அம்பேத்கரும் சாதி ஒழிப்பும் பற்றி க. முகிலனும் விளக்கப்படுத்தினர். தொடர்ந்து ஒரு மணி நேரம் கலந்துரையாடல் நடைபெற்றது.

21.05.2025 முற்பகல் 9.30 மணிமுதல் 'மார்க்சிய மெய்யியல்' பற்றி க. முகிலனும் 'இடப்பங்கீடு' பற்றி மு. சுவாமிநாதனும் விளக்கங்கள் அளித்தனர். பிற்பகல் 'இந்துத்துவ அச்சுறுத்தல்' பற்றி வாலாசா வல்லவன் விளக்கவுரைக்குப் பின் இரண்டு நாள்களும் விளக்கப் பெற்ற பொருள்கள் பற்றி கலந்துரையாடினர். மாலை 5 மணிக்கு வகுப்பு நிறைவடைந்தது. 35 மாணவர்களும் பத்து கட்சித் தோழர்களும் பங்கேற்று வகுப்பினைப் பயனுள்ளதாக்கினர்.

# நடிகர் கமலகாசனின் அண்மைப் பேச்சு
# கருத்துரிமையை மறுப்பதற்கா நீதித்துறை?



- சா. குப்பன்

நடிகர் கமலகாசன் நடித்த திரைப்பட நிகழ்ச்சியில் பேசிய அவர், அந்த நிகழ்வில் கலந்துகொண்ட கன்னட திரைப்பட நடிகர் சிவராஜ்குமாருக்கும் தனக்குமுள்ள அன்புறவை வெளிப் படுத்துகின்ற தன்மையில் கன்னட மொழிக்கும் தமிழுக்குமான உறவை, தமிழிலிருந்து பிறந்தது கன்னடம் என 27.05.2025 அன்று குறிப்பிட்டார். அவர் அப்படிப் பேசியதில் கன்னட மொழியை குறைத்துக் கூறுவது அவரது நோக்கமல்ல.

கமலகாசனின் இப்பேச்சு கன்னட மொழியை அவமதிப்ப தாகும் எனக் கருநாடகத்தில் உள்ள அரசியல் கட்சியினரும் கன்னட மொழிப் பற்றாளர்களும் மிகக் கடுமையான எதிர் வினை புரிந்தனர். இதன் காரணமாக கமலகாசன் நடித்து, 05.06.2025 அன்று கருநாடகம் உள்ளிட்ட பல இடங் களிலும் வெளியிடப்பட இருந்த திரைப்படத்தை கன்னடத் திரைப்பட வணிகக் கழகத்தினர், கமலகாசன் கன்னட மொழி குறித்துப் பேசியதற்காக மன்னிப்புக் கேட்காவிட்டால் கருநாடகத்தில் படத்தைத் திரையிட அனுமதி மறுப்பதாக அறிக்கையிட்டனர். இதனால் கமலகாசன் கருநாடகத்தில் திரைப்படத்தை திரையிட காவல் துறையினர் பாதுகாப்பு வேண்டி கருநாடக உயர்நீதிமன்றத்தை நாடினார்.

கமலகாசனின் தன் கருத்தைப் பேசுவதற்கு உரிமை உண்டு. அவரது கருத்தை ஏற்காதவர்கள் அக்கருத்துத் தவறு என மறுக்கலாம்; மாற்றுக் கருத்தைக் கூறலாம். அதை விடுத்து மன்னிப்புக் கேட்க வேண்டும் என வலி யுறுத்துவதும் திரைப்படத்தைத் திரையிடுவதைத் தடுப்பதும் சரியன்று என்றல்லவா நீதிமன்றம் கூறியிருக்க வேண்டும்? கமலகாசன் வேண்டிக்கொண்டவாறு திரைப்படத்தை வெளியிட கருநாடகக் காவல்துறை பாதுகாப்பு அளித்திட வேண்டும் என உத்தரவிட்டிருக்க வேண்டும் அல்லவா? மாறாக வழக்கை விசாரணை செய்த உயர்நீதிமன்றம், கமலகாசனின் கோரிக்கையை ஏற்காமல் அவரை மன்னிப்புக் கேட்குமாறு வலியுறுத்தியது சட்டத்தின்படிதானா? முறைதானா?

நீதிமன்றத்தின் நடவடிக்கை, நீதியை நிர்வகிக்கின்ற நெறியா அல்லது கட்டப்பஞ்சாயத்தா? என்பதை நீதித்துறை தான் தெளிவுபடுத்திட வேண்டும். திரைப்படத்தில் கன்னட மக்கள் ஏற்க முடியாத காட்சிகளோ, உரையாடல்களோ இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படவில்லை. திரைப்படத்தை வெளியிட திரைப்படத் தணிக்கை வாரியம் சான்று வழங்கி யுள்ளது. இந்த நிலையில் திரைப்படத்தைத் திரையிட அனுமதிக்க மறுப்பவர்களை நீதித்துறை ஏற்று ஆதரிப்பது அரசமைப்புச் சட்டம் கூறு 19(1)(a) வழங்கியுள்ள கருத்துரிமையை, பேச்சுரி மையை மறுப்பது என்பது சனநாயகத்திற்கும் சட்டத்திற்கும் எதிரானதாகாதா?

சமற்கிருதம், இந்தி தவிர மற்ற மக்களின் தாய்மொழிகளை ஒடுக்கி, விழுங்கி, அழித்துவிட பா.ச.க.-மோடி தலைமை யிலான பார்ப்பன-பனியா பாசிச ஆட்சியாளர்கள் சூழ்ச்சித் திட்டங்கள் பல வகுத்துச் செயல்படுத்திக் கொண்டுள்ளனர். இப்போது தமிழ்மொழியிலிருந்து கிளைத்தவை கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு ஆகிய தென்னக மொழிகள் என்பதான கருதுகோளும் தமிழே உலகின் முதன்மொழி, உலக மொழிகளுக்கெல்லாம் தாய் என்று தமிழ்நாட்டு-தமிழறிஞர்களுடே நிலவி வருகின்ற கருதுகோளும் தமிழ்நாட்டிற்கு-தமிழர்களுக்கு அப் பால் அறிந்தேற்கப்படவில்லை. இத்தகு ஆராய்ச்சி முடிவுகள் தரவுகளுடன் பன்னாட்டு மொழியியல் அறிஞர்கள் அரங்குகளில் விவாதிக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தென்னக மொழிகளான தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு ஆகிய மொழிகள் ஒரு மூலமொழி - திராவிட மொழி மூலத்தில் (Proto Dravidian) இருந்து கிளைத் தவை என்ற கருதுகோள் தமிழ்நாட்டிற்கு, தமிழர்களுக்கு அப்பாலும் அறியப்பட்டுள்ளதாகும். தென்னக தேசிய இனங் களுக்கு இடையில் பண்பாட்டு நிலையிலும் அரசியலிலும் இணக் கமான நல்லுறவைப் பேணவும் மேம்படவும் மொழிகளுக் கிடையே சமன்மை என்பதே உதவக் கூடியதாகும்.

தமிழ்மொழியை உயர்த்திப் பேசுவதால் மற்ற மொழிகள் தாழ்த்தப்படுவதாக ஓர் எண்ணம் வளருவது நன்மை பயக்காது. எனவே இவ்வாறு பேசப்படுவது தவிர்த்தல் நன்று. தமிழின் தொன்மை, மேன்மை, இலக்கிய வளமை போற்றப்படல் வேண்டும். இவற்றைத் தமிழ் இளந்தலை முறையினருக்கு உணர்த்துதல் வேண்டும்.

தத்தமது மொழியை உயர்ந்ததெனப் பெருமிதம் கொள்வது என்பது மற்ற மொழிகளைச் சிறுமைப்படுத்துவதாகக் கருதிட இடமளிக்கக் கூடாது என்பதில் கவனமாக இருத்தல் வேண்டும். தேவையற்ற பகைமையை வளர்த்தல், இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள அனைத்து மொழிகளும் ஆரிய மொழியான சமற்கிருதத்திலிருந்து கிளைத்தவை என்பதை நிலைநாட்டிட அதிகாரத்தைப் பயன்படுத்திச் செயல்பட்டுக் கொண்டுள்ள பகையாற்றலுக்கு உதவுவதாகிவிடும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தேசிய இனங்களுக்கிடையில் மோதலை உருவாக்கிட முயலும் வஞ்சகக் கூட்டத்தார் ஆதாயமடைய உதவுவதாகக் கூடியதை நாம் செய்யலாமா?

பாசிச-பார்ப்பனிய பா.ச.க., ஒன்றிய ஆட்சியதிகாரத் திற்கு வந்ததிலிருந்து ஒரே நாடு-ஒரே மொழி என சமற்கிருதம் - இந்தி மொழித் திணிப்பு முயற்சிகள் அதிகரித்து வருவதன் விளைவாக தத்தமது மொழி பற்றிய விழிப்புணர்வு, பெரு மிதம், அக்கறை வளர்ந்து வருகின்றது. இந்த மாற்றம் வரவேற்கத்தக்கதாகும். தேசிய இனங்களின் தன்னுரிமைக்கு வலுசேர்த்திட உதவுவதாகும். அந்தந்த தேசிய இனத்திற்கும் முதன்மை அடையாளம் மொழியே ஆகும். ஆதிக்க மொழியான சமற்கிருதம் - இந்தி தவிர்த்த மொழிகளுக்கிடையே சமத்துவ உணர்வை வளர்ப்போம். தேசிய இனங்களின் ஒடுக்குமுறை யை எதிர்த்திட ‘‘ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களே ஒன்று சேருங்கள்’’ என முழங்குவோம்!

பின்குறிப்பு : கமலகாசன் மன்னிப்புக் கேட்க வேண்டிய தில்லை என்றும் அவருடைய திரைப்படம் திரையிட பாது காப்பு வழங்கவேண்டும் என்றும் 17.6.2025 அன்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

❖

# உயர்கல்வி நிறுவனங்களில் மேல்சாதியினரின் ஆதிக்கம்

2006ஆம் ஆண்டு ஒன்றிய அரசின்கீழ் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு முதன்முதலாக வழங்கப்பட்டது. 1970கள் முதல் பட்டியல் இனத்தவர்க்கும் பழங்குடியின ருக்கும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இந்த இட ஒதுக்கீடு மாணவர் சேர்க்கையில் மட்டுமல்லாது, ஆசிரியர் பணியிடங்களிலும் வழங்கப்படுகிறது.

ஒன்றிய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் ஒடுக்கப் பட்ட வகுப்பு மாணவர்கள் பலவகையான ஒடுக்குமுறை களுக்கு உடன் பயிலும் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் உள்ளாக்கப்படுகின்றனர் என்கிற செய்திகள் ஊடகங்களில் அவ்வப்போது வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. இதற்குக் காரணம் ஒன்றிய அரசின் உயர்கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட்ட காலம் முதலே பார்ப்பனர்களின் பிற மேல்சாதியினரின் கோட்டையாக இருந்துவருவதே ஆகும். அண்மையில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் அனைத்திந்திய பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் சங்கத்தின் தேசியத் தலைவர் கவுத் கிரண்குமார், ஆசிரியர் பணியிடங் களில் இடஒதுக்கீடு பற்றிப் பெற்ற விவரங்கள் இதை உறுதி செய்கின்றன.

21 இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் (IITs) பணிபுரியும் மொத்த ஆசிரியர்களில் 80 விழுக்காட்டினர் மேல்சாதியினர்; பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 11.2 விழுக் காட்டினர்; பட்டியல் வகுப்பினர் 6 விழுக்காட்டினர்; பழங் குடியினர் 1.6 விழுக்காட்டினர்; மற்றவர்கள் உயர்சாதி ஏழைகள் (EWS), மாற்றுத்திறனாளிகள் ஆவர்.

இதேபோன்று 13 இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனங் களில் (IIMs) பணிபுரியும் ஆசிரியர்களில் 82.8 விழுக் காட்டினர் ஆதிக்க மேல்சாதியினர்; பிற்படுத்தப்பட்டவர்கள் 9.6 விழுக்காடு, பட்டியல் இனத்தவர் 5 விழுக்காடு, பழங் குடியினர் 1 விழுக்காடு மற்றவர்கள் உயர்சாதி ஏழைகள் (EWS), மாற்றுத் திறனாளிகள்.

இந்தூரில் உள்ள ஐ.ஐ.எம்.இல் 109 ஆசிரியர்களில் 106 பேர் (97.2 விழுக்காடு) மேல்சாதியினர். பட்டியல் இனத்தவரோ, பழங்குடியினரோ ஒருவர்கூட இந்தூரில் ஆசிரியராக இல்லை. உதய்பூர் ஐ.ஐ.எம்.இல் 90 விழுக்காடு, லக்னோ ஐ.ஐ.எம்.இல் 95 விழுக்காடு ஆசிரியர்கள் மேல் சாதியின ராகவே உள்ளனர்.

இந்திய அரசமைப்புச் சட்டப்படி ஒன்றிய அரசின் கீழ் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பின ருக்கு 27 விழுக்காடு, பட்டியல் இனத்தவர்க்கு 15 விழுக்காடு, பழங்குடியினருக்கு 7.5 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும். ஆனால் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி பெறப்பட்ட தகவல்களின்படி 80 முதல் 90 விழுக்காடு அளவுக்கு உயர்சாதியினரே பணியிடங்களைக் கைப்பற்றி யுள்ளனர்.

இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு இடஒதுக்கீடு அளிப்பது என்று கூச்சலிடும் படிந்த மோதாவிகள், இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குள் பிற்படுத்தப்பட்ட, பட்டியல் இன, பழங்குடி வகுப்பினருக்கு உரிய இடங்கள் வழங்கப்படும் என்பதற்கு விடை சொல்வார்களா?

ஒன்றிய அரசின் பணியிடங்களில், இடஒதுக்கீடு வாரியாக ஏ, பி,சி, டி பிரிவுகளில் உள்ளவர்களின் விவரத்தை 2023-2024ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் ஒன்றிய அரசு அளிக்கவில்லை. இந்த விவரங்கள் இருந்தால்தானே உரிமை மறுக்கப்பட்டவர்கள் கோரிக்கை வைக்க முடியும்? புள்ளிவிவரங்களை மறைப்பதில் உலகிலேயே நரேந்திர மோடி ஆட்சி முதலிடம் வகிக்கிறது.

**- க.முகிலன்**

## ஒன்றிய அரசின் சமற்கிருதம், இந்தித் திணிப்பைக் கண்டித்து
## பொதுக் கூட்டம்



ஒன்றிய அரசின் சமற்கிருதம் இந்தித் திணிப்பைக் கண்டித்தும் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு 20 விழுக்காடு வேலையை உயர்த்தக் கோரியும், தமிழ்வழிக் கல்வி இயக்கத்தின் சார்பில் 19.4.2025 அன்று சென்னை அரும் பாக்கம் எம்.எம்.டி.ஏ. பகுதியில் பொதுக் கூட்டம் நடை பெற்றது. தேனித் தமிழர் வரவேற்புரையாற்றினார். தோழர்கள் அன்புகுமார், க. மனோகரன், பசுமைக்குழு கோபிநாத் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

அ.சி. சின்னப்பத் தமிழர் நோக்க உரையாற்றினார். கரு. அண்ணாமலை, முல்லை தமிழன், பா. கருணாநிதி, ஆவடி நாகராசன், முகமது உசேன், த. மணிசேகரன், செள. சுந்தரமூர்த்தி, பொன். மாயவன், தமிழ் சாக்ரடீசு முதலானோர் உரையாற்றினர். இறுதியில் வாலாசா வல்லவன் சிறப்புரையாற்றினார். நிலவழகன் நன்றியுரை யாற்றினார்.

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர் : **வாலாசா வல்லவன்**
எண்.2/12, சி.என்.கே.சந்து, சேப்பாக்கம், சென்னை - 600 005. கைப்பேசி : 8668109047
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,**
16, (142), ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014. பேசி : 044-2848 2441